
நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)



தேடி வந்தருள் செய்து நிற்பவள் தேவி பராசக்தி;
சிந்தை யில் இடம் கேட்டிருப்பவள் தேவி பராசக்தி;
பாடி வந்திடத் தேடி வருகிறாள் தேவி பராசக்தி;
பட்டீஸ் வரத்தில் துர்க்கை அவளைப் பாடுவதே முக்தி.

ஏப்ரல் 1990

நினைவாஞ்சலி



தோற்றம் : 11-9-1927

மறைவு : 25-4-1979

திருமதி இராம. மெய்யம்மை ஆச்சி

(முன்னாள் டைரக்டர் ஸ்ரீ விசாலம் சிட் பண்ட் லிமிடெட்)

அன்னைநீ அய்யன்நீ அன்பான சகோதரிநீ
இனிமைதரு ஏதிலாத் தோழிநீ நன்றான
ஆசிரியன் நல்கும் தமிழானதாயே மெய்யம்மை
மாசிலாநின் தாளுக்கெம் அஞ்சலி.

என்றும் தங்கள் நினைவைப் போற்றும்

மகன் இராம. அருணாசலம்

மருமகள், மகள்கள், மருமகன்கள், பேரப் பிள்ளைகள்

மற்றும் ஸ்ரீ விசாலம் சிட் பண்ட் லிமிடெட்

அலுவலர்கள்

உ
சிவமயம்

நகரத்தார் குரல்

(சமூக, இலக்கிய மாத இதழ்)

குரல் 9

ஒலி 3

சுக்ல
பங்குனி

ஏப்ரல்
1990

மூர்த்திகள் மூன்று பொருள் ஒன்று - அந்த
மூலப் பொருள் ஒளியின் குன்று
நேர்த்தி திகழும் அந்த வொளியை - எந்த
நேரமும் போற்று சக்தி யென்று

— மகாகவி பாரதியார்

ஆசிரியர்:
வி. என். சிதம்பரம் செட்டியார்

வெளியிடுபவர்:
சுப. அ. நடராசன் செட்டியார்

துணை ஆசிரியர்:
எல். சுந்தரம்

அலுவலகம்:
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை-625 001

தொலைபேசி: p. p. 26668

ஆண்டுச் சந்தா ரூ. 24-00 டெபாசிட் சந்தா ரூ. 200-00

பழநிப் பாத யாத்திரை - சில நினைவுகள்

சோ. சொ. மீ. சுந்தரம் M. Com

1990 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இரண்டாம் தேதி பகல் 11 மணியளவில் பழநிப் பாத யாத்திரை செய்யும் அன்பர்கள் ஆயிரக் கணக்கில் கண்டவராயன் பட்டிக் கண்மாயில் சென்று கொண்டிருக்கிறார்கள் வெய்யிலும் அதிகம். கண்மாயும் வளர்ந்து கொண்டே இருக்கிறது. அண்மையில் பெய்த மழையால் நனைந்து வெய்யிலால் வெடித்த கண்மாய்க் கரையில் கரம்பைக் கட்டிகள் காலில் குத்தும் போது ''கல்லும் முள்ளும் காலுக்கு மெத்தை'' என்று வாய் தன்னையறியாமல் சொல்கிறது.

அறுபது வயதான ஒரு பெரியவர் நடந்து வருகிறார். கரம்பைக் கட்டிகள் காலில் குத்தும்போது அவருக்குத் தாங்க முடியாத கோபம் வருகிறது. யார் மீது? முருகன் மீது தான்! ''ஏண்டா முருகா! இப்படிப் பாடுபடுத்தினால் நான் உன்னை வந்து பார்க்காமல் விட்டுவிடுவேன் என்று நினைத்தாயோ? விடமாட்டேன்! என்ன பாடு படுத்தினாலும் பாத யாத்திரையாக வந்து உன்னைப் பாராமல் விட மாட்டேன். ஆண்டிப் பயலே! உன் சந்நிதிக்கு வந்தே திருவேன்.'' என்று முருகனோடு பேசிக்கொண்டு - இல்லை- முருகனைத் திட்டிக்கொண்டே கண்டவராயன்பட்டிக் கண்மாயை - இல்லை - பிறவிப் பெருங் கடலையே கடந்து விடுகிறார். இவர் திட்டத் திட்ட முருகன் இவர் பக்கத்தில் வருகிறான் வைதால் வாழ்த்தாக ஏற்கிறான்.

''மொய்தார் அணி குழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்போன்.''

என்ற கந்தரலங்காரம் கண்டவராயன்பட்டிக் கண்மாயில் மிக நன்றாக விளங்கியது.

சென்னை இந்தியன் வங்கி மேலாளராகப் பணியாற்றும் தேவகோட்டை கும. கரு. இல்லத்தைச் சேர்ந்த லெட்சுமணன் செட்டியார் பல்லாண்டுகள் பாத யாத்திரை செல்பவர். அவர் கூறுகிறார். ''எல்லாரும் இருந்து கொண்டோ நின்று கொண்டோ தவம் செய்வார்கள். இந்தப் பாத யாத்திரை நடந்து கொண்டே செய்யும் தவம்.'' - இது அவரது அனுபவ வாக்கு.

இந்தப் பாதயாத்திரைப் பக்தர்களில் பலவகை உண்டு. சிலர் மிக வேகமாக ஓடக் கூடியவர்கள். பலர் நடந்து பாதயாத்திரை செய்கிறார்கள். சிலர் நகர்ந்தும் பாதயாத்திரை செய்கிறார்கள். நானும் என் மனைவியும் இந்த மூன்றாவது வகையைச் சேர்ந்தவர்கள். ஒரு முறை முருகனைப் பற்றிய வழி நடைப் பாட்டில் ஈடுபட்டு எங்கள் குழுவினர் இருக்க வேண்டிய இடத்தை விட்டு விலகிக் குறுக்குப் பாதையில் சுமார் ஐந்து கிலோ மீட்டர் முன்னேறிப் போய்விட்டோம். காலை 11 மணி. இளநீர் வாங்கிக் கொடுத்தால் சமாதானம் அடையாத வயிறு இட்லியோ சோறோ கேட்கிறது. வெள்ளாளபட்டி என்ற ஊரில் உள்ள பள்ளிக் கூடத்திற்கு காலை 11-30 க்குப் போய்ச் சேர்ந்தோம். மரத்தடியில் உட்கார்ந்த

தும் 'முருகா மிகவும் களைப்பாயிருக்கிறதே; பசிக்கிறதே' என்று மனம் கேட்கிறது. அதிசயம் அநேகமுற்ற பழநிமலை யாண்டவன் அதிசயம் நடத்துகிறான். தேவகோட்டை வினைதீர்த்தான் செட்டியார், "வரவேண்டிய இடத்திற்கு நீங்கள் வரவில்லை. உங்கள் தம்பி சொன்னதும் குறுக்குப் பாதையில் இங்கே தான் வந்திருப்பீர்கள் என்று நினைத்து இட்லி, வடை, கேசரி எல்லாம் காரில் வைத்துக் கொண்டு வந்தேன். இந்தாருங்கள்" என்று கொடுக்கிறார். அதை வாங்கிச் சாப்பிடப் போகும் பொழுது, பள்ளிக்கூடக்



கட்டிடத்தில் இருந்து ஒருவர் வந்து "சென்னை இந்தியன் வங்கியைச் சேர்ந்த கோபால் என்பவர் இங்கே சாப்பாடு போடுகிறார். நீங்கள் கட்டாயம் வரவேண்டும்" என்று கூறி அழைத்துச் சென்று வடை பாயாசத்தோடு சாப்பாடு போடுகிறார். அந்தச் சாப்பாட்டின் பெருமை வேகாத வெய்யிலில் நடந்துவந்து சாப்பிட்டால்தான் தெரியும். வீட்டில் உட்கார்ந்து சாப்பிட்டால் தெரியாது சாப்பிட்டதும் நினைத்தேன். "முருகன் பாடும் படுத்துகிறான்; பலனும் கொடுக்கிறான். பாடுபடுத்திய அளவிற்குப் பலனும் கொடுக்கிறான்" என்று நான் நினைத்தால் அது சரிதானே.!

நத்தத்திலிருந்து திண்டுக்கல் செல்லும் வழியில் பகல் 12 மணிக்கு உப்பாறு என்ற ஆற்றைத் தாண்டுகிறோம். ஆற்றில் ஒரு விவசாயி 'பம்ப் செட்' மூலம் தண்ணீர் எடுத்துப் பக்தர்கள் குளிக்க வசதி செய்திருக்கிறார். பழநி வரை வழியெல்லாம் இப்படி விவசாயிகள், குளிக்க ஏற்பாடு செய்து தருகிறார்கள். ஒரு விவசாயி கூறுகிறார் "இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பாதயாத்திரைப் பக்தர்களுக்குக் குளிக்கத் தண்ணீர் தரமாட்டேன்' என்று சொன்னேன். அந்த ஆண்டு மழையில்லாமல் பெரும் நட்டம் ஏற்பட்டுவிட்டது. அதன்பிறகு பக்தர்களைக் கூப்பிட்டுக் குளிக்கத் தண்ணீர் தருகிறேன்." என்று அவர் கூறினால் முருகன் திருவருளை வியக்காமல் இருக்க முடியவில்லை அல்லவா !

கூப்பிட்டுக் குளிக்கத் தண்ணீர் தருவது மட்டுமல்ல கூப்பிட்டுச் சாப்பாட்டுப் பொட்டலம், சத்துமாவு, லட்டு, முறுக்கு, ரொட்டி, மிட்டாய், புளியோதரை, தயிர் சாதம், பழங்கள் என்று வகை வகையாகக் கொடுக்கிறார்கள்.

"ஆண்டி முருகனை நாடையிலே - நல்ல
ஆகாரம் சேருது கூடையிலே."

என்று கவிஞர் அர. சிங்கார வடிவேலன் பாடியது பல்லாண்டுகளாக நடந்து கொண்டே இருக்கிறது.

சாணார்பட்டி என்ற ஊர் நத்தத்திலிருந்து திண்டுக்கல் செல்லும் வழியில் உள்ளது. அந்த ஊருக்கு முன் ஒரு சிறு கிராமத்தில் டெல்லியில் பணியாற்றும் தேவகோட்டை அன்பர்கள் சிலர் பகல் 12 மணிக்குப் பாதயாத்திரைப் பக்தர்களுக்குப்

பால் கொடுக்கிறார்கள். "முதலில் வெய்யிலுக்கேற்றதாக மோர் கொடுக்க ஏற்பாடு செய்தோம். ஆனால் அந்த ஆண்டு வழியெல்லாம் மழை பெய்தது. ஏற்பாடு செய்திருந்த வீட்டுக்காரர் முருகன் அருளால் பாலுக்குப் பிரை ஊற்றாமல் பாலாகவே வைத்திருந்தார். முருகன் கட்டளை பால் கொடுக்க வேண்டும் என்பது போலும் என்றெண்ணி அன்று முதல் பாலாகவே கொடுத்து வருகிறோம்." என்று அந்த அன்பர்கள் கூறினார்கள். ஞானப்பால் அருந்த ஞானசம்பந்தனாக வந்த முருகன் மோரை விட்டுப் பாலை விரும்புவது இயல்பு தானே!

பாதிவழியில் பலபேர் நடக்க முடியாமல் சோர்ந்து வரும் பொழுது, அவர்களோடு வந்து, வழிநடைப் பாட்டுக்களைப்பாடி, எளிதாக அழைத்துச் செல்லும் பக்தர்கள் பலபேர் இருக்கிறார்கள். இவர்கள் தொண்டின் பெருமைக்கு எல்லையே இல்லை.

"எனக்கு இரண்டு காலிலும் ஆணி. நடந்து போனால் எருமை மாடு கூட என்னைத் தாண்டிப் போய்விடும் ஆனால் அவனைப் பற்றிப் பாடிய பாட்டுக்கள் என்னை நடக்க வைக்கின்றன." என்று கூறும் தேவகோட்டை மீயன்னா சேவுகன்செட்டி என்ற பேரன்பர் தானும் நடந்து மற்றவர்களையும் நடக்க வைக்கிறார். இந்தக் கவிஞர் எழுதிய

"ஈசனோடு பேசியது போதுமே
- கொஞ்சம்
என்னோடும் பேசு சுவாமி
நாதனே."

என்றபாடல் முருகனைக் கொண்டு வந்து முன்னால் நிறுத்துகிறது.

இதுபோலக் கொடுமளூர் முருகன் பதிகம் பாடிப் பல பேரைக் களைப்புத் தெரியாமல் நீண்ட தூரம் அழைத்துச்சென்றவர் தேவகோட்டை அ. முத்து மாணிக்கம் செட்டியார், "பாசி படர்ந்த மலை பங்குனித் தேர் ஓடுமலை" என்று இவர் பாடத் தொடங்கிவிட்டால் ஓடாத தேர் கூட ஓடும். இவர் மகன் அசோக் என்ற இளைஞரும் இந்த நல்ல பணியில் ஈடுபட்டிருப்பது வாழையடி வாழையென முருகன் பணியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட நகரத்தார் பெருமைக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது.

பழம்நீ பாதயாத்திரையில் வெள்ளிவிழாக் கண்டவர் திரு. லெ. மு. மு. முத்துமாணிக்கம் அவர்கள். பாதயாத்திரைக் கவியரங்கம் வைத்தும், பழம்நீ புத்தகத்தை வெளியிட்டும், பட்டகாரர் மடத்தில் தங்க ஏற்பாடு செய்தும், தானே சாப்பாடு போட்டும், மற்றவர்கள் அன்னதானம் அளிக்க ஏற்பாடு செய்தும், பலருக்கும் உதவியாகத் திகழும் இவருடைய பணி, இவருடைய முன்னைத் தவத்திற்கு அடையாளம் ஆகும்.

இத்தகைய பேரன்பர்கள் எண்ணற்றோர் இருக்கிறார்கள். தாங்கள் மட்டும் பாதயாத்திரை செல்லாமல், மற்றவர்கள் வரவும் உதவி செய்யும் இவர்கள் போற்றத்தக்கவர்கள். காவடி தூக்கி வரும் அன்பர்கள், காவடிக்கு முன் வேலேந்தி ஆனந்தக் களிப்புக்கு ஏற்ப ஆடிவரும் பக்தர்கள், காவடியோடு நடக்கும் பக்தர்கள், இவர்கள் அனைவருக்கும் துணையாகக் கண்டனூர்ச் சாமியடி பழனியப்ப செட்டியார் வருவதுபோல, முருகன் அருள் தாங்கி வரும் அவருடைய மைந்தர் இளைய அருளடியார், இவர்களுக்குத் துணையாக வரும் இரத்தினவேல் ஆகியவை அனைத்தையும் சொல்ல வேண்டுமானால் கம்பன் மீண்டும் பிறந்து வரவேண்டும்.

நகரத்தார் பெருமைக்கும் சிறப்புக்கும் காரணமாக இருப்பது இந்தப் பாதயாத்திரை. இதைச் சிறப்புறச் செய்தால், நம் சமூகம் முன்னேறும்.

எனது வெளிநாட்டு அனுபவங்கள்



வி.என்.சிதம்பரம்

—51—

பாரீஸ் நகருக்குள் நுழைந்ததுமே வேனை ஓட்டுவதில் எங்களுக்குச் சிரமம் தெரிந்தது. இலண்டனில் சாலைகளின் இடது புறமே வாகனங்கள் செல்ல வேண்டும். அதைத்தான் நாம் இந்தியாவில் பின்பற்றி வருகிறோம். பாரீஸில் வலது பக்கமாகத்தான் வாகனங்கள் செல்ல வேண்டும். அதைத்தான் அமெரிக்காவில் பின்பற்றுகிறார்கள். மிகவும் கவனமாகப் பார்த்து காரை ஓட்டிச் செல்லவேண்டும். இலண்டனை ஒப்பிடும்போது பாரீஸ் மிகப்பெரிய நகரமாக இருக்கிறது. வானுயர்ந்த கட்டிடங்கள், பெரிய அரண்மனைகள் முதலியவைகளைப் பார்க்கின்றபோது உலகத்தைப் பிடிக்கப் புறப்பட்ட பிரஞ்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள், இருவரில் பிரஞ்சுக்காரர்களுக்குத்தான் உலகத்தைப் பிடிப்பதில் அதிக வாய்ப்பு இருந்ததாகத் தெரிகிறது. ஆனால் தந்திரத்தால் ஆங்கிலேயர்கள் உலகத்தைப் பிடித்துவிட்டார்கள்.

பாரீஸில் ஈபிள் டவரைப் பார்க்கச் சென்றோம். அது சுமார் 1000 அடி உயரம் இருக்கிறது. உலகத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் டூரிஸ்டுகள் அதை வந்து பார்க்கிறார்கள். ஈபிள் டவரை இரும்பினாலே 100 ஆண்டுகளுக்கு முன் அமைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு வெளிநாட்டினரும் அங்கு வந்து போட்டோ எடுத்துக் கொள்கிறார்கள். தைரியமானவர்கள் கோபுரத்தின் உச்சி வரை சென்று வருகிறார்கள். தைரியமில்லாதவர்கள் முதல் அல்லது இரண்டாவது மாடிவரை சென்று திரும்பிவிடுகிறார்கள். ஈபிள் கோபுரத்திற்கு படிகள் வழியாகவும் செல்லலாம், லிஃப்டிலும் செல்லலாம். ஈபிள் டவரில் அதை உருவாக்கிய இன்சினீயர் ஈபிளின் உருவத்தை மெழுகு பொம்மையாகச் செய்து வைத்திருக்கிறார்கள். ஈபிள் டவரைப் பார்த்துவிட்டு கீழே இறங்கிவந்து அங்கே அரை நாள் இருந்தோம். அங்கு எங்கு பார்த்தாலும் கடைகளாக இருந்தன.

என் மாப்பிள்ளை திரு. பெரிய கருப்பன் அவர்கள் இரவு நாங்கள் தங்கியிருக்கும் வேனிலேயே கணக்கு எழுதி இருப்புப் பார்த்து விடுவார்கள். ஈபிள் டவருக்குக் கீழே இருந்து நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது, ''நேற்று நீண்ட நேரம் கழித்து வந்ததால் கணக்கு எழுத நேரமில்லை'' என்று சொன்னார்கள். அதற்கு நான் பதில் சொல்வதற்குள் ''நேற்று எழுதாவிட்டால் என்ன, இன்று அதை எழுதிவிடலாமே'' என்று ஒரு குரல் கேட்

டது. பாரீஸில் தமிழ் பேசுவதைக் கேட்டதும் எங்களுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. திரும்பிப் பார்த்தோம் அப்போது ஒருவர் வண்டியில் பல காரங்களை வைத்து வியாபாரம் செய்துகொண்டிருந்தார்; அவர் தான் பதில் சொன்னுர். அவரை அணுகி ''எப்பொழுது இந்தியாவில் இருந்து வந்தீர்கள்? எப்படி வியாபாரம் நடக்கிறது?'' என்று கேட்டோம். அதற்கு அவர் ''நான் பாண்டிச்சேரியில் பிறந்தவன்; பாண்டிச்சேரியை பிரஞ்சுக்காரர்கள் ஆண்டபோது பாண்டிச்சேரியிலிருந்து பாரீஸிற்கு



பாரீஸ் ஈபிள் டவர் முன்பு வி. என் சிதம்பரம் செட்டியார் அவர்கள்.

வருவது மிகவும் எளிது. அப்படி வந்து நீண்ட நெடுங்காலமாக தங்கி சிறிய வியாபாரம் செய்து வருகிறேன்'' என்று சொன்னர். அவருக்கு எங்களைப் பார்த்ததிலே மகிழ்ச்சி பாரீஸில் வார்ஸா அரண்மனை என்று ஒன்று இருக்கிறது அரண்மனை மிகவும் பெரிதாக இருக்கிறது அரண்மனையில் இருக்கும் பூங்காவில் நீரூற்று (Fountain) இருக்கிறது. அந்த நீரூற்று பலவிதக் கோணங்களிலே தண்ணீரை வாரி இறைக்கிறது. இரவு நேரங்களிலே அந்தத் தண்ணீர் விழுவது தெரிவதற்கு விளக்கையும் மாறி மாறிப் போடுகிறார்கள். அப்படிப் போடும்போது மியூசிக்கும் போடுகிறார்கள். மியூசிக்கோடு வெளிச்சத்தில் தண்ணீர் அங்கும் இங்கும் விழுவது நீரூற்று நடனம் ஆடுவது போலத்தெரிகிறது. அதை ஆயிரக்கணக்கான உல்லாசப் பயணிகள் வேடிக்கை பார்க்கிறார்கள்.

(வளரும்)

நம்மவர் உதிர்த்த நல்முத்துக்கள்!

''சந்திர மண்டலத்திற்குச் சென்ருல் அங்கும் ஒரு மலையாளி தேனீர்க் கடை வைத்திருப்பார்'' என்பார்கள். ''அந்த மலையாளிக்கு வட்டிக்குப் பணம் கொடுக்க நமது நகரத்தார் ஒருவர் அங்கும் இருப்பார்'' என, நான் சொல்கிறேன்.

பெண்கள் வட்டகையில் என்னைச் 'சிங்காரம்' என்று சொல்வதை விட 'அழகம்மை ஆச்சியின் கணவன்' என்ருல் அனைவரும் உடனே தெரிந்து கொள்கிருர்கள். அந்த அளவிற்கு நமது சமூகத்தில் பெண்கட்குச் செல்வாக்கு இருக்கின்றது.

காசி முதல் கன்னியாகுமரி வரை கல்விப் பணியை அன்று முதல் இன்று வரை செம்மையாகச் செய்து வருபவர்கள் நம் நகரத்தார்கள்.

— முனைவர் அர. சிங்கார வடிவேலன்

கல்யாணம் ஆன பெண்ணை அவளது கழுத்தில் உள்ள தாலியை வைத்துக் கண்டு கொள்ளலாம். கல்யாணம் ஆன ஆண்மகனை அவனது முகத்தில்தெரியும் கவலையை வைத்துக் கண்டு கொள்ளலாம்.

பதினொரு சுற்றும் இருபத்தொரு சுற்றும் உள்ள முறுக்குகளை கல்யாண முறையாக வாங்கி வாங்கி சுற்றுப் பெருத்துவிட்டார்கள் ஆச்சிமார்கள். சுற்றுக்குப் பணத்தைச் செலவழித்து செலவழித்துச் சுற்றுச் சுருங்கி விட்டார்கள் செட்டியார்கள்.

''வாங்கும் சம்பளத்தை எப்படிச் செலவு செய்கிருய்?'' என்று ஒரு பையனிடம் கேட்டேன். அவன் ''அக நானூறு; புற நானூறு'' என்ருன். முதலில் ஒன்றும் புரியவில்லை. பிறகு தான் புரிந்தது. அகம் நானூறு– அதாவது வீட்டுச் செலவு நானூறு; புறம் நானூறு - அதாவது வெளிச் செலவு நானூறு என்று!

தமிழ்ச் சீர் கொடுத்த இனம் நம் இனம். பொங்கலுக்குப் பெண்ணுக்குச் சீர் கொடுப்பது போல் தமிழ் அறிந்த புலவர்கட்குப் பொங்கலன்று அரிசி, வெல்லம், கரும்பு என்று சீர் கொடுத்து சீர் அறிந்த புலவர்களை சீர் செய்த சிறப்பான இனம் நம் நகரத்தார் இனம்.

— புலவர் மாமணி மா. முத்துராமன்

கல்யாணம் பேசி முடித்ததும் நம்மவர்கள் சொல்லும் முதல் வாக்கியம் ''எதிரியிடம் எல்லாவற்றையும் கரந்து விடு'' என்பதுவே ஆகும் கல்யாணம் பேசி முடித்ததும் பெண் வீட்டுக்காரன் எதிரியாகி விடுகிருன்.

முறையில்லாமல் வாங்கும் நம் கல்யாணச் சிட்டைக்கு 'முறைச் சிட்டை' எனப் பெயர்.

எவ்வளவு நாகரிகம் ஏற்பட்ட போதும் பழைய பட்டப் பெயர்களை மறக்காத நாடு, செட்டிநாடு.

— லேனா தமிழ்வாணன்

(பெங்களூரில் 25-2-90 அன்று நடைபெற்ற கர்நாடக நகரத்தார் நற்பணிப் பேரவைத் தொடக்க விழாவில் பேசியவை)

புத்தக வெளியீட்டாளர் செ. செல்லப்பன்

புத்தக வெளியீட்டுத் துறையில் - புத்தக விற்பனைத் துறையில் 42 ஆண்டுகள் அனுபவம் பெற்றவர், திரு. செ. செல்லப்பன் அவர்கள். 1948ல் சென்னை ஸ்டார் பிரசுரத்தில் பங்கு தாரராக இருந்த இவர், 1960ல் இராயவரம் சு. கதி. குழ. அவர்களோடு இணைந்து மதுரையில் மீனுட்சி புத்தக நிலையத்தைத் தொடங்கினுர். 1984 முதல் அதன் முழு உரிமையாளராக இருந்து பதிப்புத் துறையையும் விற்பனைத் துறையையும் கவனித்து வருகிறுர்.

அரிமளத்தைச் சேர்ந்த திரு. செல்லப்பனை நான் 30 ஆண்டுகளாக அறிவேன். நான் தொடக்க காலத்தில் பார்த்த போது அவர் எப்படி இருந்தாரோ அப்படியேதான் இன்றும் இருக்கிறுர். அதே அடக்கம். அதே எளிமை உருவம் கூட அப்படியேதான்!


திரு. செல்லப்பனுக்கு பதிப்புத் துறையில் எப்போதுமே நல்ல பெயர் உண்டு. இவர் ஏராளமான – தரமான எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தியிருக்கிறுர்.

மகரிஷி எழுதிய ''பனிமலை'' நாவலை முதன் முதலாக வெளியிட்டு அவரை அறிமுகப்படுத்தியவர். இதுபோல் பலரையும் அறிமுகப்படுத்தியிருக்கிறுர்.

திரு. செல்லப்பன் இதுவரை தெ. பொ. மீனுட்சி சுந்தரனுர் துரை அரங்கசாமி, அ. ச. ஞானசம்பந்தம், ஜெயகாந்தன், எஸ். ஆர். கே., தொ. மு. சி. ரகுநாதன், தி. ஜானகிராமன் புதுமைப் பித்தன், தமிழண்ணல் போன்ற 150 எழுத்தாளர்களின் 250 நூல்களை வெளியிட்டுள்ளார்.

திரு. ஜெயகாந்தன் எழுதிய ''சில நேரங்களில் சில மனிதர்கள்'' திரு. தி. ஜானகிராமன் எழுதிய ''சக்தி வைத்தியம்'' திரு. தொ. மு. சி ரகுநாதன் எழுதிய ''பாரதி : காலமும் கருத்தும்'' ஆகிய மூன்று நூல்களும் மீனுட்சி புத்தக நிலையம் வெளியிட்டு சாகித்ய அகடமி விருது பெற்றவை ஆகும்.

திரு. ஜெயகாந்தன் எழுதிய ''சுந்தர காண்டம்'' (நாவல்) தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ராஜ ராஜ சோழன் விருது பெற்றுத் தந்ததாகும்.



மீனுட்சி புத்தக நிலையத்தை 1960ல் தேவகோட்டை தமிழ் வள்ளல் மேனு அவர்கள் தொடங்கி வைத்தார்கள் என்றும் டாக்டர் துரை அரங்கசாமி எழுதிய ''அன்பு நெறியே தமிழர் நெறி'' (திருமுருகாற்றுப் படைக்கு விளக்கம்) திரு. ஜெயகாந்தனின் ''இனிப்பும் கரிப்பும்'' மற்றும் 6 நூல்கள் ஒரே நாளில் வெளியிடப் பெற்றதாகவும் திரு. செல்லப்பன் தெரிவித்தார்.


திரு. ஜெயகாந்தனின் ''சில நேரங்களில் சில மனிதர்கள்'',

''ஒரு நடிகை நாடகம் பார்க்கிருள்'' ''யுகசந்தி'' ஆகிய நூல்களும் திரு எஸ். ஆர். கே. எழுதிய ''கம்பனும் மில்ட்டனும்'' என்ற நூலும் தமது வெளியீடுகளில் அதிகமாக விற்பனையான நூல்கள் என்றுர்.


திரு. ரகுநாதன் தன்னுடைய ''முதலிரவு'' நூலில் 18, 25, 30 வயதுகளில் ஒரு பெண் அடைகின்ற பாலுணர்ச்சிகளை மிகவும் நளினமாக எழுதியிருந்ததாகவும் அந்நூல் மூன்று மாதங்களுக்குள் மூன்று பதிப்பு வெளிவந்ததாகவும் அப்போது சென்னை மாநில அரசின் கல்வி அமைச்சராக இருந்த திரு. அவினுசிலிங்கம் அது 'செக்ஸ் புத்தகம்' எனக் கூறி அந்நூலின் விற்பனைக்குத் தடை விதித்ததோடு அபராதம் கட்டச் சொன்னதாகவும் தமிழில் விறலி விடு தூது, கூழப்ப நாயக்கன் காதல் என்று ஏற்கனவே வெளிவந்திருப்பனவற்றை ஆதாரமாக வைத்து வாதாட எண்ணியதாகவும் பின்னர் திரு. வையாபுரிப் பிள்ளையின் ஆலோசனைப் படி அபராதம் செலுத்தியதாகவும் திரு செல்லப்பன் கூறினுர்.

கரிச்சான் குஞ்சு என்ற எழுத்தாளரின் புதல்வி திருமணத்திற்காக திரு தி. ஜானகிராமன் திரு ஜெயகாந்தனின் சிபாரிசுக்கிணங்கி தாம் பணம் உதவி செய்து ''பசித்த மானுடம்'' என்ற நாவலை வாங்கி வெளியிட்டதாகவும் அது ஆபாசமான கதை என்று முதலில் முத்திரை குத்தப்பட்டு பின்னுல் நல்ல நாவல் எனப் பலரால் பாராட்டப்பட்டதாகவும் கூறினுர்.

''உங்களது நூல்களின் அட்டைகள் பளபளப்பாக இல்லாமல் பழைய பாணியில் சாதாரணமாக இருப்பதன் காரணம் என்ன?'' என்றபோது-



மதுரையில் நடைபெற்ற ''சில நேரங்களில் சில மனிதர்கள்'' புத்தக வெளியீட்டு விழாவில் (இடமிருந்து வலமாக) திருவாளர்கள் செ. செல்லப்பன், முனைவர் தமிழண்ணல், கருமுத்து தி. மாணிக்கவாசகம் செட்டியார். ஜெயகாந்தன்.



சென்னையில் நடைபெற்ற ''ஓர் இலக்கியவாதியின் அரசியல் அனுபவங்கள்'' புத்தக வெளியீட்டு விழாவில் (இடமிருந்து வலமாக) திரு சண. முத்தையா, கர்மவீரர் காமராஜர், திரு. எஸ். ஆர். கே, திரு. செல்லப்பன், திரு. ஜெயகாந்தன்.

''ஒரு புத்தகத்தின் உள் விஷயங்களைக் கவனிக்காமல் மேல் அட்டையின் பளபளப்பை மட்டும் நம்பிப் புத்தகங்களை வெளியிடுவது தேவையில்லை என்பது என் கருத்து. மேலும் அதிகமாகச் செலவு செய்து புத்தக விலையினை அதிகரிக்கச் செய்வது எனக்குப் பிடிக்காத விஷயம்'' என்றார்.

திரு. செல்லப்பன். திரு. தொ. மு. சி. ரகுநாதன் எழுதிய ''இளங்கோவடிகள் யார்?'' என்கிற நூலை வெளியிட்டுள்ளார். இந்த நூலில் 'இளங்கோவடிகள் நகரத்தார்' என ஆசிரியர் ஆய்வு செய்து எழுதியிருக்கிறார். திரு ரகுநாதனுக்கு திரு. செல்லப்பன் மதுரை நகரத்தார் சங்கத்தின் சார்பில் பாராட்டு விழா ஒன்றும் நடத்தினார்.

இராயவரம் சு. கதி. காந்தி பாடசாலையின் நிறுவனர் கணித மேதை கதிரேசன் செட்டியார் அவர்கள், திரு. செல்லப்பனது ஆயா வீட்டு அய்யா ஆவார்கள். குழந்தைக் கவிஞர் திரு. அழ. வள்ளியப்பாவும் திரு. செல்லப்பனும் அந்தப் பள்ளியின் பள்ளித் தோழர்கள் ஆவர். டாக்டர் மு. வ., டாக்டர் வ. சுப. மா., கருமுத்து தி. மா. ஆகியோர் திரு. செல்லப்பனிடம் அன்பாக ஆதரவாக இருந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

திரு. செல்லப்பன் 1956 முதல் 1958 வரை மூன்று ஆண்டுகள் மதுரை நகரத்தார் சங்கத்தின் செயலாளராகச் சேவை புரிந்திருக்கிறார்.

மதுரை - இராமநாதபுரம் வணிகக் கழகத்தில் 1973-74ல் பொருளாளராகவும் 1975-76 & 1976-77ல் துணைத் தலைவராகவும் சேவையாற்றியிருக்கிறார். இப்போது நிர்வாகக் குழு உறுப்பினர்களில் ஒருவர்.

மதுரை நகர அரிமா சங்கத்

தில் 25 ஆண்டுகளாக உறுப்பின ராகவும் பல ஆண்டுகளாக மாவட்ட அமைச்சரவை உறுப் பினராகவும் உள்ள இவர் 1977-78ல் அதன் தலைவராகச் சேவை புரிந்திருக்கிறார்.

பதிப்புத் துறையில் மதகு பட்டி திரு. கண. முத்தையா (தமிழ்ப் புத்தகாலயம்) தனது வழிகாட்டி எனக் கூறும் திரு. செல்லப்பன் இனப்பற்றுக் கொண்டவர்; சிறந்த பொது நலத் தொண்டர்.

இவரது மணி விழா 4-5-82ல் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. திரு. செல்லப்பனுக்கு திருமதி முத்தம்மாள் ஆச்சி என்கிற மனை வியும் மூன்று பையன்களும் மூன்று பெண்களும் உள்ளனர்.

சந்திப்பு: எல். சுந்தரம்

பூஜை வேளையில் கரடி

நல்ல செயல்கள் நடைபெற் றுக் கொண்டிருக்கும்பொழுது, குறுக்கே புகுந்து சிலர் குழப்பம் விளைவித்தால் ''பூஜை வேளையில் கரடி' புகுந்தது போலப் புகுந்து விட்டார்'' என்று சொல்வது வழக்கம். 'கரடி' என்பதை விலங்கினத்தைச் சேர்ந்த கரடி என்றே பலர் பொருள் கொள் கிறார்கள். உண்மை அதுவல்ல. 'கரடி' என்பது ஓர் இசைக்கருவி. அதைப் பூஜை வேளையில் இசைத் தால் மனம் ஒருநிலைப்படாது. அது பூஜைக்கு உகந்ததல்ல; பூஜைக்கு இடையூறாக இருக்கும். இதைக் கருத்தில் கொண்டு தான் ''பூஜை வேளையில் கரடி புகுந்தது போல'' என்ற பழமொழி உரு வாயிற்று.

— அள. சித. சொ. தெ. சொக்கலிங்கம்
காரைக்குடி

'நானும் ஒரு நகரத்தார்...'

தமிழண்ணல்

4. எச்சில் இலை நாகரிகம்

நம் விசேடங்களில் பந்தி வைக்கும் முறை, உண்ணீர் உண்ணீர்! என்று உபசரிக்கும் முறை இவற்றைப் பலர் பாராட்டக் கேள்விப்பட்டிருக்கிறேன். 'செட்டி நாடு சமையல்' உலகப் புகழ் பெற்றிருக்கிறது. நாடெங்கும் 'செட்டிநாடு உணவக'ங்களைப் பார்க்கிறோம். ஒரு முறை காரைக்குடி உயர்நிலைப் பள்ளியிலிருந்து, மாணவர்களை அழைத்துக்கொண்டு, பேருந்து ஒன்றில் சுற்றுலாவுக்காக மைசூர் போயிருந்தோம். திரும்பும் போது, தமிழ்நாடு கருநாடக எல்லையில், நள்ளிரவில் ஒரு காவல் துறை அதிகாரி எங்கள் பேருந்தை நிறுத்திச் சோதனையிட்டார். அவர் மதுவிலக்குக் கண்காணிப்பாளர். அவரே நிரம்பிய 'போதை'யில் இருந்ததால், இவ்வாறு சோதனையிடத் தகுதியுடையவர் என்றுதான் தோன்றியது! அவர் ''எங்கிருந்து வருகிறீர்கள்?'' என்று கேட்க, நாங்கள் 'காரைக்குடி' என்று சொன்னதும் அவரடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. உடனே அருகிலுள்ள இடத்திற்கு அழைத்துச் சென்று, பேருந்தில் இருந்த 44 பேருக்கும் தேநீர் வாங்கிக் கொடுத்து வழியனுப்பி வைத்தார். 'உங்களுக்கு ஏன் இவ்வளவு செலவு?' என்று நாங்கள் தயங்கியபொழுது, ''போங்கையா, செட்டிநாட்டில் விருந்து வைக்கும்போது நீங்கள் தூக்கி எறிகிற எச்சில் இலைக்கு

ஈடாகுமா இது?'' என்று மனம் நெகிழ்ந்து கூறினார்.


நான் முதலில் இதை ஒரு பாராட்டாகத்தான் எடுத்துக் கொண்டேன். பிறகு நாள் செல்லச் செல்லத்தான் நம் விசேட நாட்களில், ஒவ்வொரு பந்தி முடிவிலும் எவ்வளவு உணவுப் பொருள்களை வைத்துத் தூக்கி எறிகிறோம் என்பதைக் கணக்கிடத் தொடங்கினேன். சாதாரணமாக ஏழு, ஒன்பது பலகாரம் என்றாலும் பதினாறு வகைக் கறிகள் என்றாலும் யாரால் சாப்பிடமுடிகிறது? எதிரே நின்றுகொண்டு, தீரத்தீர அல்லது திருமுன் 'அதை வை, இதை வை' என்று சமையற்காரனை அதட்டுகிறோம். நம் உபசரிக்கும் முறை நல்ல பண்பாடுதான். ஆனால் வேண்டாத வருக்கும், தேவை இல்லாததை வைக்கச் சொல்லித் தூக்கி எறிகிறோமே, அது பண்பாடா? நாகரிகமா?

இன்றைய விலைவாசி என்ன? நம் பலகாரங்களோ 'பணத்தைக் குடிக்கும் பயங்கரவாதிகள்'! எண்ணெயில் வேகவைப்பவைதான் அதிகம்; அதிலும் உளுந்து சம்பந்தப்பட்டவை மிகுதி. நயமான பலகாரங்கள் தான்; ஆனால் தேவையறிந்து, அளவாகப் பயன்படுத்தப்பட வேண்டியவை. இன்றேல் நாம் அவற்றைச் சாப்பிடுவதற்குப் பதிலாக அவை நம்மைச் சாப்பிட்டுவிடும்.

சாப்பிட்டுச் செலவு பத்தாயிரம், இருபதாயிரம் தானே என்று எண்ணாதீர்கள். ஒவ்வொரு பந்தியிலும், ஒவ்வொரு விசேடத்திலும் இவ்வாறு தூக்கி எறியப்படும் செல்வத்தைக் கணக்கிட்டால், ஆண்டு ஒன்றுக்குக் கோடிக் கணக்கில் விரையமாவது தெரியவரும். எதையும் புள்ளிபோட்டுப்பார்க்கும் நகரத்தார் இதையும் கணக்கிட்டுப் பார்த்தால் உண்மை தெரிய வரும்.

இம்மிஇம்மியாய்ச் சேர்த்து
எல்லாமே ஒருநாளில்
அம்மியிலே வைத்(து)
அரைத்தொழிக்கும் நகரத்தார்!
எண்ணியெண்ணிச் சேர்த்து
எல்லாமே ஒருநொடியில்
உண்ணாமல் தின்னாமல்
எடுத்தெறியும் நகரத்தார்!

என்று பாடலாம்போல் தோன்றுகிறது. அதிகாலை ஆறு மணிக்கு ஏழு பலகாரம் யாரால் சாப்பிடமுடியும்? இந்தச் செலவு பெண் வீட்டார், மாப்பிள்ளை வீட்டார் இருவருக்கும் பயன்படாதது என்பது மட்டுமன்றி, தேசத்தின் செல்வத்தை வீணடிப்பதுமாகும். உடனடியாக ஒருசில பலகாரம் மட்டும்-மதியம் ஒருசில உணவுவகைமட்டும் என்று அமைத்து, 'எடுத்துண் முறையை' (Buffet) கொண்டு வர வேண்டும் என்று தோற்றுகிறது. என் நண்பர் வலம்புரி முத்து நல்லப்பன் அவர்கள், அமராவதிபுதூர் மகளிர் இல்லம் சொ. முருகப்பாவிடம் தனிச் செயலராக இருந்தவர். நான் அங்கேயே ஓரிரு ஆண்டுகள் தங்கியிருந்து, புலவர் வே. அண்ணாமலை அவர்களுடன் 'கம்பராமாயணப் பதிப்புக்கு உதவி செய்தோம். அங்கு வேலைக்காரர்கள், எடுபிடி ஆட்கள் அதிகம். ஆனால் சாப்பிட அமர்ந்ததும், எல்லா உணவு வகைகளையும் கொண்டுவந்து வைத்துவிட்டுப் போய்விடுவார்கள். பெரியவர் சொ. முருகப்பா உட்பட, நாங்கள் எங்களுக்கு வேண்டியதை, அமர்ந்தபடி எடுத்தெடுத்து வைத்துக்கொண்டு உண்டோம். சட்டியை நகர்த்திக் கொடுத்து மற்றவருக்கு உதவுவோம். 'மகளிர் இல்லத்தில்' இது நடைமுறைப் பழக்கமாக்கப்



நெற்குப்பை இராம. விசுவநாதன் (கங்கை காவேரி வாணிகத் தொடர்பு) அவர்களின் புதல்வி செல்வி தெய்வானை (வணிகவியல் இளையர்)க்கும் ஆ. தெக்கூர் அ. கரு. பழ, சோம மாணிக்கம் செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் சோமசுந்தரத்திற்கும் (அறிவியல் இளையர்) 14-3-90 அன்று நெற்குப்பையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருமணத்திற்குத் தொழிலதிபர்கள், வணிகர்கள், தமிழறிஞர்கள், நண்பர்கள் பெருமளவில் வந்திருந்து சிறப்பித்தனர். மணமக்களோடு நமது இதழின் ஆசிரியர் வி. என். சிடி. அவர்கள் இருக்கிறார்கள்.

பட்டதற்கு, உணவுப் பண்டங்களை வீணடிக்கக் கூடாது என்பதே காரணமாகும்.

திருமண வீட்டில் பலகாரத்திற்குத் தொட்டுக்கொள்ளும் துவையல், சாம்பார், சொதி, திரக்கல், தட்டப்பயறு குழம்பு, போதாததற்குச் சீனி என்று பல வகைகளை அனைவருக்கும் பரிமாறுகிறோம் ஏதேனும் ஒன்று போதுமென்பவருக்கு ஏழு வகைகளைப் பரப்பி, அவரையும் திகைக்க வைத்து நாமும் திண்டாடுகிறோமே தேவை தானா?

கடுங்காய்ச்சல் கண்டவனுக்குத் தலைக்குத் தண்ணீர் விட்டபிற்பாடுதான், சோர்வு அதிகமாகும்; கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பார்கள். நம் விசேடங்களிலும் அதை நடத்தும்போது ஆனந்தமாகத்தான் இருக்கும். முடிந்த பிறகு தான் நகரத்தாருக்குச் சோர்வும் தலை சுற்றுவதும் கடன் சமாளிப்பும் கூடுதலாக இருக்கும்!

நண்பர் முத்து நல்லப்பன் வீட்டிற்கு விருந்துக்குப் போவதல் இப்போதும் வேடிக்கையாக இருக்கும் சொ. முருகப்பாவின் மகளிர் இல்லம் பள்ளியில் பழகியவர் அல்லவா? அவர் மனைவி நமக்குப் பலகாரம் பரிமாறும் போது, அவர் "கேட்டு வை.. நில்லுநில்லு வேணுமான்னு கேட்டுட்டு வை" என்று கூடுதலாகப் பரிமாறிவிடாமல் அவரையறியாமல் தடுப்பார் அழகம்மை

''சும்மாயிருங்கள், அவுக சாப்பிட்டால்கூட நீங்கள் விட மாட்டீர்கள் போலிருக்கிறதே'' என்று கடிந்து கொள்வதுண்டு. இங்கே உபசாரம் குறைகிறது என்பதன்று பொருள். இனி நாட்டிற்குத் தேவையான உபசாரமே இப்படித்தான் இருக்க முடியும்; இருக்க வேண்டும்.

இனிமேல், நீங்கள் ஒவ்வொரு விசேட வீட்டிலும் சாப்பிட்டு முடிந்தபின், ஒரு பந்தியிலிருந்து எடுத்தெறியப்படும் எச்சில் இலைகளைக் கூர்ந்து கவனியுங்கள். அல்லது நீங்களே எத்தனை தடவை, எத்தனை விசேடங்களில் இவ்வாறு இலையில் வைத்து மூடிவிட்டு எழுந்திருந்தீர்கள் என்று கணக்கிட்டுப் பாருங்கள். பாடுவார் முத்தப்பர் ''அன்றைக்கு வந்திட்ட அம்மா இலக்குமி நீ, என்றைகக்கும் நீங்கா திரு'' என்றார். எவ்வளவோ துன்பங்களுக்கிடையே, நம்மைத் தேடிவந்த இலக்குமியை, நாம் 'தெருவில் கொண்டு எறிவதாக' என்னுள் ஓர் ஆதங்கம் நெடு நாளாக இருக்கிறது. என் நண்பர் ஆங்கிலப் பேராசான் டாக்டர் **நா. சுப்பிரமணியம்** ஒரு நாள் ஒரு பருக்கையை வீணாக்கத் தம் மனம் ஒப்பாது என்று ஏதோ ஒரு பேச்சுக்குச் சொன்னார். வசதி படைத்திருந்தாலும் ஒவ்வொரு நகரத்தாரிடத்தும் அந்த நற்பண்பு உண்டு. ஆனால் விசேடங்கள் என்ற பெயரால், வீண் செலவுகள் செய்து, ஆயிரம் ஆயிரம் பண்டங்களைத் தூக்கி எறிவது சிக்கனமாகுமா? அடுத்த முறை இதைவிட மோசமான ஒன்றையும் உங்களுக்கு நினைவு படுத்த விழைகிறேன்.

(வளரும்)

சென்னையில் பொன். புதுப்பட்டி நகரத்தார் பொது நல மன்றம்

பொன். புதுப்பட்டியைச் சேர்ந்த நகரத்தார்கள் 18-2-90 அன்று சென்னையில் திரு. ஆறு. வீர. குமரப்ப செட்டியார் அவர்கள் இல்லத்தில் ஒன்று கூடி தமக்கென 'பொன். புதுப்பட்டி நகரத்தார் பொது நல மன்றம்' என்ற ஒரு அமைப்பைத் தோற்றுவித்துள்ளனர்.

இம்மன்றத்திற்கு திரு. ஆறு. வீர. குமரப்ப செட்டியார் தலைவராகவும், திரு. மு. பழ. ராம. பழநியப்ப செட்டியார் திரு. ராம. சதாசிவம் செட்டியார் ஆகிய இருவரும் துணைத் தலைவர்களாகவும் திரு அ. லெட்சுமணன் செட்டியார், திரு. வீர. இராமநாதன் செட்டியார் ஆகிய இருவரும் செயலாளர்களாகவும் திரு. கா. சிதம்பரம் செட்டியார், திரு சுப சுப்பிரமணியன் செட்டியார் இருவரும் இணைச் செயலாளர்களாகவும் திரு. சுப. மா. வேலாயுதம் செட்டியார் பொருளாளராகவும் தேர்வு செய்யப் பெற்றுள்ளனர். மற்றும் 15 பேர் செயற்குழு உறுப்பினர்களாக உள்ளனர்.

மேற்படி கூட்டத்தில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. பொன். புதுப்பட்டி மாணவ - மாணவிகளுக்கு கல்விக்கு உதவித் தொகை வழங்குதல்; பெண்களுக்கு திருமணத்திற்கு உதவித்தொகை அளித்தல்; வேலை வாய்ப்புக்கு ஆலோசனை வழங்குதல்; நம் சமூகத்தில்சிறந்த சேவை புரியும் நகரத்தார்களுக்குப் பாராட்டு விழா நடத்துதல் போன்றவை நிறைவேற்றப்பட்ட சில தீர்மானங்களாகும்.

கோடை கால வடஇந்திய காசி யாத்திரை

19-4-90 முதல் 2-5-90 வரை 14 நாட்கள்

சென்னை- டெல்லி- ஆக்ரா- மதுரா- பிருந்தாவனம்- ஹரித்துவார் - ரிஷிகேஷ் - காசி - அலகாபாத் (திரிவேணி)

III டயர் ரயில் கட்டணம் - பிராமணாள் சாப்பாடு - ஊர் சுற்றிப் பார்க்கும் சிலவு உள்பட நபர் 1க்கு ரூ. **1575/-** கயா, புத்தகயா சேர்த்து 16 நாட்கள் நபர் 1க்கு ரூ. **1675/-**

19-4-90 முதல் 4-5-90 வரை 16 நாட்கள்

பம்பாய் சேர்த்து நபர் 1க்கு ரூ. **1890/-**

கயா, புத்தகயா சேர்த்து 18 நாட்கள் நபர் 1க்கு ரூ. **1990/-** அட்வான்ஸ் நபர் 1க்கு ரூ. **750/-** வீதம் அனுப்பி டிக்கட் பதிவு செய்யவும்,

---

கர்நாடக க்ஷேத்திர யாத்திரை

கொல்லூர் ஸ்ரீ மூகாம்பிகை தரிசனம்

13-5-90 முதல் 18-5-90 வரை 6 நாட்கள்

மதுரை - பண்ணாரி - மைசூர் - சுப்ரமண்யா - தர்மஸ்தலா - கட்டீல் - உடுப்பி - கொல்லூர் (ஸ்ரீ மூகாம்பிகை) சிருங்கேரி - பெங்களூர் (வழி) - திருப்பதி - திருச்சானூர் - திருத்தணி - காஞ்சிபுரம் - மேல்மருவத்தூர் - சமயபுரம் - மதுரை.

நாள் 6க்கு பஸ் கட்டணம் காலை ஆகாரம்-பகல் சாப்பாடு மாலை ஸ்வீட் காரம், காபி இரவு ஆகாரம் தங்கும் சிலவு உள்பட நபர் 1க்கு ரூ. 450/-

நபர் 1க்கு அட்வான்ஸ் ரூ. 100/- வீதம் அனுப்பி டிக்கட் பதிவு செய்யவும்.

SRI MURUGAN TRAVEL AGENCY MADURAI

ஸ்ரீ முருகன் டிராவல் ஏஜன்ஸி

9, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை-1. 31169

வ. சுப. மாணிக்கனார்: சில செய்திகள்

ஃ வ. சுப. மாணிக்கனார் அவர்கள் காரைக்குடியில் தமிழ்ச் சங்கத்தை நிறுவி 20 ஆண்டுகள் தமிழ்ப் பணி செய்து வந்தார்கள். அதற்கு நிதி சேர்த்து வைத்து தொடர்ந்து நடந்துவர தக்கவர்களையும் நியமித்திருக்கிறார்கள்.

ஃ ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வெற்றி வேற்கை, உலக நீதி, மூதுரை, நன்னெறி, நல்வழி ஆகியவற்றிற்கு 'ஏழினந் தமிழ்' என வ. சுப. மா. அவர்கள் புதுப் பெயர் சூட்டினார்கள். குழந்தைகள் சிறு வயதிலேயே இந்த ஏழு நூல்களையும் மனப்பாடம் செய்தால் வாழ்வு முழுவதும் அவர்களுக்கு நன்மை பயக்கும் என உறுதியாக நம்பினார்கள்.

ஃ காரைக்குடியைச் சுற்றி 15 மைல் வட்டாரத்தில் உள்ள ஆயிரக்கணக்கான குழந்தைகளை இவற்றை மனப்பாடம் செய்யச் செய்து தேர்வு நடத்தி ஆண்டு தோறும் பரிசுகள் வழங்கி வந்தார்கள்.

ஃ இந்த ஏழினந் தமிழ் நூல்களை நம் முன்னோர்கள் படித்து அதன் படி நடந்து வந்ததால்தான் நல்ல சான்றோர்களாக விளங்கினார்கள் என்பது மாவன்னா அவர்களின் நம்பிக்கை.

ஃ வ. சுப. மா. அவர்கள் எழுதிய ''வள்ளுவம்'' நூலை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெரிய தமிழறிஞர் ஒருவர் பாராட்டிப் பேசும் போது ''வள்ளுவம் என்ற இந்த நூலுக்கு விலையே மதிக்க முடியாது. எடைக்கு எடை பொன் கொடுத்து வாங்க வேண்டிய நூல் இது'' என்றார்.

ஃ மாணிக்கனார் அவர்கள் தம் இல்லத்தில் அரிய பெரிய நூற்களில் சுமார் 5000 தொகுத்து வைத்துள்ளார்கள். இவை அனைத்தையும் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்திற்கு நன்கொடையாக வழங்க வேண்டுமென உயில் எழுதி வைத்திருக்கிறார்கள். (இதை அவர்களது குடும்பத்தார் சில திங்கள்களில் நிறைவேற்ற உள்ளனர் எனத் தெரிகிறது.)

கர்ப்பிணிகளுக்கு...

ஹே சங்கர ஸ்மரஹர ப்ரமதாதிநாத
மன்னாத ஸாம்ப சசிசூட ஹர த்ரிசூலின்
சம்போ ஸுகப்ரஸவக்ருத் பவ மே தயாளோ
ஸ்ரீ மாத்ருபூத சிவ பாலய மாம் நமஸ்தே

(திருச்சி மலைக்கோட்டை அருள்மிகு தாயுமானவ சுவாமி சன்னதியில் எழுதப்பட்டுள்ள பாடல் இது)

கர்ப்பிணிகள் இந்த சுலோகத்தைத் தினமும் மூன்று முறை சொல்லி வணங்கி வந்தால் அருள்மிகு தாயுமானவர் அருளால் நலமான மகப்பேறு ஏற்பட்டு நலன்கள் கிடைக்குமாம்.

— இராம. அலமேலு
கோட்டையூர்

மணிவண்ணன் மடல்..

4. மகளிரின் அடிப்படைப் பிரசினை

அன்புள்ள அண்ணனுக்கு,

உங்களுக்கு முதல் முதலாக எழுதுகிறேன். ஆயினும் ஆச்சிக்கு எழுதிய பெண்கள் பிரசினைதான் இதிலும் தொடருகிறது. நான் எதிர்பார்த்தவாறே நகரத்தாரிடமிருந்து கருத்துரைகள் வருகின்றன. மகிழ்ச்சி. எவ்வளவு காரசாரமாக வேண்டுமானாலும் கருத்துக்களை எழுதலாம்.

சிதம்பரம் நண்பர் பின்வருமாறு எழுதுகிறார்: ''பெண்கள் படிக்க வேண்டும். படிப்பை ஏட்டளவில் நிறுத்திவிட்டுக் குடும்பத்தைக் கவனிக்க வேண்டும். பிள்ளைகளைப் பேணுவது அவளுக்கு என்று உள்ள பொறுப்பு. பெண் பணிக்குச் செல்லும் அனேகக் குடும்பங்களில், பிள்ளைகள் அன்புக்கு ஏங்கித் தவித்து, மயக்கம் தந்து மகிழ்வூட்டும் போதைப் பொருள்களை நாடிச் செல்கிறார்கள். வெளியே சென்று பணி புரியும் பெண்ணுக்கு வேலைப் பளு அதிகம். பல வேதனைகளும் வந்து சேர்கின்றன.'' - இது அவர் கடிதத்தின் சாரம்.

இதற்கு என் கருத்தைச் சொல்லுகிறேன்.

பிள்ளைகளைக் கவனிக்கும் பொறுப்பு தாய்க்கு மட்டும்

அல்ல; தந்தைக்கும் உண்டு. இருவரும் கவனிக்காமல், வெளியில் பொழுது போக்கிச் சுற்றுவதால்தான் பிள்ளைகள் தவித்துப் போகிறார்கள். மேலும் இந்த நிலை உயர் குடும்பங்களில் தான். நடுத்தர, அடுத்த தரக் குடும்பங்களைச் சேர்ந்த பல பெண்கள் இன்று பலதரப்பட்ட அலுவல்கள் புரிகிறார்கள். மின்சார சாதனங்கள் பெருகிவிட்ட இந்நாளில் குடும்ப வேலையில் உழைப்பே இல்லை. நேரத்தோடு எழுந்து பிள்ளைகளைக் கவனித்துப் பள்ளிக்கு அனுப்பலாம். தந்தையும் இதில் பங்கு ஏற்க வேண்டும். ஏற்கிறார்கள். இக் குடும்பங்களில் பிள்ளைகள் நன்றாக வளருகிறார்கள்.

1981 ஆம் ஆண்டுப் புள்ளி விவரப்படி, நம் நாட்டில், கிராமப் புறங்களில் உள்ள பெண்களுள் 24 சதவீதமும், நகரங்களில் 11 சதவீதமும் வீட்டைவிட்டு வெளியில் சென்று பணிபுரிந்தனர். இந்த எண்ணிக்கை ஆண்டு தோறும் கூடி வருகின்றது. மகப்பேற்றுக் காலத்தில் விடுமுறை வசதி தரப்படுகின்றது. மாதாந்தர விலக்குக் காலத்தை இன்றைய பெண் சிரமமாகக் கருதுவதில்லை. சில அலுவலகங்களில் குழந்தைகளைக் கவனிக்கத் தனிப் பிரிவுகள் உள்ளன. பல நடுத்தரக் குடும்பங்களில் பிள்ளைகள் உயர் கல்வி கற்கும் நிலை, தாயும் வேலை பார்ப்பதால் சாத்தியமாகியிருக்கிறது.

நண்பர் கூறுவதுபோல், சம்பாதிக்கும் பெண்களுக்கு வேதனைகள் வருகின்றன. ஆனால் அவை வேலைப்பளுவினால் அல்ல, அவர்களின் மாறிவிட்ட சூழ்நிலையை, வீட்டிலும் வெளி

யிலும் ஆண்கள் புரிந்துகொள்ளாததால் வருகின்றன. ஆண்களின் பொறாமை, சந்தேகம், பேராசை முதலியவற்றால் வருகின்றன. நான் எல்லா ஆண்களையும் சொல்லவில்லை. நண்பர், அந்தப் பெண்களுக்கு வேதனை உண்டாகிறது என்று கூறுவதால், அவர்களின் சூழலில் உள்ள ஆண்களை மட்டுமே குறிப்பிடுகின்றேன்.

இந்தியக் குடும்பங்களில் பெண்களின் துன்பங்கள் ஏராளம். அவற்றை நான் திரும்பவும் அடுக்க வேண்டியதில்லை. ஆழமாகச் சிந்தித்துவிட்டேன்; அண்ணன், பெண்களின் துன்பங்கள் பலவற்றுக்கும் காரணம். அவர்கள் வாழ்வெல்லாம், ஆண்களின் பாதுகாப்புக்கு உரியவராக, அவர்களைச் சார்ந்து வாழ வேண்டியவர்களாக இருப்பதுதான் என்று எனக்குத் தெளிவாகத் தெரிகிறது. பெண்களுக்கு நம் நாட்டில், பழங்காலம் முதல் பொருளாதாரச் சுதந்திரம் இல்லை அவர்கள் கல்வி கற்று, நல்ல அலுவலில் இருந்து வருமானம் பெறும் நிலை, நம் குடும்ப அமைப்பில் இத்தனை காலமாக இல்லை. அண்ணன், நீங்கள் கோபப்படக்கூடாது. அன்புடைய ஒரு சில குடும்பங்களை வைத்துப் பொது நிலைமையை எண்ணிப்பார்க்காதீர்கள். பொது நிலை என்ன என்றால், இந்திய சமுதாயம் ஆண் ஆதிக்கச் சமுதாயமாக இருந்து வருகிறது. பெண்ணுக்கு, பொருளா



வேகுப்பட்டி ஆர்எம். ஆண்டியப்ப செட்டியார் அவர்கள் புதல்வன் செல்வன் இராமையா **B. Com. A. C. A** (ஆடிட்டர் வைஸ்யா பாங்க், பெங்களூர்) க்கும் கல்லல் ஆர்எம். நாச்சியப்ப செட்டியார் அவர்கள் புதல்வி செல்வி முத்து மீனுளுக்கும் 1-2-90 அன்று கல்லலில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. பாங்க் ஆப் மதுரையின் தலைவர் திரு. சுப. சபாபதி, திரு சாத்தப்பா சுப்பிரமணியன், திரு. ஆர்எம் பழனியப்பன் (முன்னாள் செயலாளர், நகரத்தார் சங்கம், திருநெல்வேலி) மற்றும் நண்பர்கள் கலந்து கொண்டு வாழ்த்தினர்.

தார சுதந்திரம் இல்லாததால், அவளுக்குத் திருமணம்தான், வாழ்க்கையை அளிக்கும் என்ற மரபும் நூற்றாண்டுகளாக உண்டாகிவிட்டது. அதனால்தான் திருமணத்தில், ''பெண் வாழ்க்கைப்பட்டாள்'' என்று கூறுகின்றனர். ஆணை அவ்வாறு கூறுவதில்லை.

இந்த நிலையால் பெண்கள் பல்லாண்டு பல்லாண்டாக அலங்கார அடிமைகளாக, தங்கள் மெல்லிய உடலே பலவீனமாக ஆகிவிட்டதால், ஆண்களால் பல்வகையான துன்பங்களுக்கு ஆளாகி, பொறுமையாக வாழ்வதே பண்பாகிவிட்டது; மரபு ஆகிவிட்டது.

பல கொடுமைகளுக்குப் பிறகு, இந்தக் காலத்தில் வந்திருக்கிறது வரதட்சிணைக் கொடுமை.

அண்ணன், இடமில்லை இக்கடிதத்தில் - தொடருகிறேன் அடுத்த மடலில்.

அன்புள்ள
மணிவண்ணன்

காரைக்குடியில் கண்ணதாசன் விழா

பசும்பொன் தேவர் திருமகனுர் மாவட்ட கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றத்தின் செயற்குழுக் கூட்டம் அம்மன்றத்தின் தலைவர் திரு சொ. அழகப்பன் தலைமையில் 6-3-90 அன்று காரைக்குடியில் நடைபெற்றது. பொதுச் செயலாளர் மக்கள் கவிஞர் திரு. அரு. நாகப்பன் வரவேற்புரை நிகழ்த்தினுர். கூட்டத்தில் வாசிக்கப் பெற்ற தீர்மானங்கள் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப் பெற்றன. பொருளாளர் திரு. பெரியப்பா நன்றி கூறினுர்.

கவியரசு கண்ணதாசன் நினைவாக மணிமண்டபம் எழுப்ப அடிக்கல் நாட்டி விரைவில் திறப்பு விழாச் செய்வதாக அறிவித்த தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணுநிதி அவர்களுக்கும் தமிழக அரசுக்கும் நன்றி தெரிவிப்பதாகவும் தமிழக முதல்வரைப் பாராட்டி பொன்னுடை அணிவிப்பதென்றும் காரைக்குடியில் ஒரு இடத்திற்குக் 'கண்ணதாசன் நகர்' எனப் பெயர் சூட்டிய பொதுமக்களுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் காரைக்குடி செக்காலை ரோட்டில் ஐந்து விளக்கு அருகில் தங்களுடைய மன்றத்தின் சார்பில் கவியரசு கண்ணதாசனுக்கு உருவச் சிலை அமைக்க நகர சபைக்கு இடம் கேட்டு விண்ணப்பிப்பதாகவும் அத்தீர்மானங்களில் குறிப்பிடப் பெற்றுள்ளன.

கண்ணதாசன் விழா காரைகுடியில் வருகிற 21—4—90 & 22—4—90 (சனி, ஞாயிறு) ஆகிய இருநாட்கள் கொண்டாடப் பெறுமென்றும் மத்திய, மாநில அமைச்சர்கள், அரசியல் தலைவர்கள் மற்றும் மதுரை வங்கியின் தலைவர் திரு. சுப. சபாபதி, திரு. வி. என். சிதம்பரம் செட்டியார் திரைப்பட இயக்குநரும் சட்டமன்ற உறுப்பினருமான திரு. இராம. நாராயணன் நடிகர் எஸ். வி. சேகர், கவிஞர்கள் திரு. வாலி, திரு. வைரமுத்து ஆகியோரும் கலந்து கொள்கிறுர்கள் என்றும் கவியரங்கம், பட்டிமன்றம், சுழலும் சொற்போர் ஆகியவை நிகழும் என்றும் திரு. அரு. நாகப்பன் அறிவித்துள்ளார்.

தமிழ்க் காந்தி

முனைவர் ச. மெய்யப்பன்

மூதறிஞர் வ. சுப. மாணிக்கனார் அவர்களை முப்பது ஆண்டுகளாக நான் அறிவேன். 1970ல் அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியராகப் பதவியேற்றது முதல் கடந்த இருபது ஆண்டுகளாக அவர்களோடு மிக நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அவருடைய தலையாய பண்பு சொல்லும் செயலும் ஒத்திருத்தல்; மனத்தூய்மையுடன் எல்லா வினைகளையும் தூய்மையாகச் செய்தல்; பதவியில் உள்ள பொழுது ஒல்லும் வகையெலாம் பணிகள் செய்து பதவிக்குப் பெருமை சேர்த்தல் என்பன.

காலை 6 மணி தொடங்கி இரவு 10மணி வரை படிப்பதும் எழுதுவதும் அவர்களுக்குப் பழக்கப்பட்ட செயல். திருக்குறள் பாட நூலாக ஓதப்படுவதைவிட, பின்பற்றப்பட வேண்டிய நூல் என்பதனைத் தம் வாழ்வில் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும், பின்பற்றிக் காட்டினார்கள்.

அவர்கள் பயணப் பெட்டியில் திருக்குறளும், திருவாசகமும் எப்போதும் இருக்கும்.

ஒவ்வொரு செயலையும் மிகுந்த பயன் விளையும் படியாகவும், நெடுநாட்களுக்குப் பயன் தரும் படியாகவும் பணவிரையம், காலவிரையம், மனித ஆற்றல் விரையம் ஆகாதவாறு செய்வது அவர் இயல்பு.

அனைந்திந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மாநாட்டில் படிக்கப்படும் கட்டுரைகள் அனைத்தையும் தட்டச்சு செய்து வழங்கும் வழக்கத்தைத் தவிர்த்து அச்சிட்டு வழங்கும் அரிய பெரிய செயலுக்கு வழி வகுத்தார்.

காலத்தையும், பொருளையும், சொற்களையும் வீணாக்காமல், பயன்படுத்தியவர்களில் மாணிக்கனார் பலருக்கும் வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

அழகப்பா கல்லூரியில் ஆயிரக் கணக்கான தென்னை மரங்கள் வைத்துக் கல்லூரிக்குத் தொடர்ந்த வருவாய்க்கும் வழி செய்தார். மதுரைப் பல்கலைக் கழகத்தில் ஊழியர்களுக்குக்



குடியிருப்பு வசதிகள் அமைத்ததும் கலைநுட்பம் நிறைந்த அழகு மிகு தோரணவாயிலை அமைத்ததும் இவருடைய பெருமைக்குச் சான்றாகும். அறிவியல் துறைகள் பலவற்றைப் புதிதாக உருவாக்கியதும் தமிழியல் துறை அமைத்ததும் வெளியீட்டுத் துறையைத் தோற்றுவித்ததும் இவர் செயற்றிறத்திற்குக் காட்டுகள்.

ஒவ்வொரு ஆசிரியரும் முப்பத்தைந்து வயதிற்குள் டாக்டர் பட்டம் பெற்று விடவேண்டும்.

சொந்த வீடு கட்டிக்கொள்ள வேண்டும் என்று கூறி ஒவ்வொரு வரும் இதில் முனைப்பாக இருக்க வேண்டும், என்று தம் உடனாசிரியர்களை நல்லாற்றுப் படுத்துவர்.

வ. சுப. பொய்மைக்கு மட்டும் பகைவர் அல்லர்; புதுக் கவிதைக்கும், எழுத்துச் சீர்திருத்தத்திற்கும் பகைவர்.

ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டைச் சீரோடும் சிறப்போடும் நடத்தியது அவர் செயல் திறனுக்கு எடுத்துக் காட்டு. தமிழையும் தமிழ் ஆசிரியர்களையும் குறைத்துப் பேசுபவர்களை எந்த உயர் பதவியிலிருந்தாலும் அனுமதிக்கமாட்டார்.

யாப்பியலில் தனித்திறம் சான்றவர். தமிழ்யாப்பின் சிறப்புக் கூறுகளை ஆய்ந்து ஆங்கிலத்தில் திராவிடமொழிகளின் ஆய்வு நிலையத்திற்கு எழுதி வழங்கியுள்ளார்.

மறைமலையடிகள், பாரதிதாசன், பாவாணர் வழியில் தமிழ் இயக்கத்திற்குத் தலைமை தாங்கினார். தமிழ் வழிக் கல்வி இயக்கத்தைத் தொடங்கி இறுதி மூச்சு வரை தமிழகம் எங்கும் பரப்பி வந்தார்.

திருமுறைகளைத் தில்லைக் கோவிலிலே பொன்னம்பலத்தில் பாட அனுமதியில்லாத ஒரு மரபை அறவேமாற்றி இப்போது அம்பலத்தில் பாடிவர வழி வகுத்தது வரலாற்றில் இடம் பெறத் தக்க தொன்று.

மொழி பயிலத் தொடங்கும் நாளிலேயே தாய் மொழி வழியே தான் கல்வி கற்பிக்கப்பட வேண்டும். குழந்தைகளுக்குப் பிற மொழியைத் திணிக்கக் கூடாது. ஆங்கில மொழித் திணிப்பால் தமிழ்க் குழந்தைகள் மரபுதிரிந்து பண்புகெட வாய்ப்பு ஏற்படுகிறது. மழலைகளுக்கு ஆங்கிலத் திணிப்பை எல்லா வகையிலும் தவிர்க்க வேண்டும் என்று அறுதியிட்டுத் தெளிவாக விளக்கினார். மழலையர் பள்ளி முதல் பல்கலைக் கழகம் வரை தமிழ் ஒன்றே பயிற்று மொழியாதல் வேண்டும் என்பதனைப் பரப்பத் தமிழ் வழிக் கல்வியியக்கம் கண்ட தலைவர். இச்செயல் தமிழக வரலாற்றில் என்றும் தனியிடம் பெறத் தக்க சிறப்பினது.

பேராசிரியராகவும், கல்லூரி முதல்வராகவும் துணை வேந்தராகவும், விளங்கிய அவர்கள் நிழற்படம் எடுத்துக் கொள்வதில் விருப்பம் செலுத்துவதில்லை.

உயர் பதவியிலுள்ள ஒவ்வொருவரும் நூற்றுக்கு மேற்பட்ட படங்களைத் தொகுத்து வைத்திருக்கும் இந்நாளில் அவர் இறந்த வேளையில் தொலைக் காட்சியில் காட்டுவதற்கு ஒரு படம் கூடக் கிடைக்கவில்லை. பட்டம் பதவிகளை நாடி அவர் அலைந்ததில்லை. பல நிறுவனங்கள் அவருக்குச் சிறப்புச் செய்ய முயன்றும் அவர் மறுத்துள்ளார். அவர் எப்போதும் பரிசுப்பொருள்கள் பெற்றதில்லை.

தம்மைக் காண வருபவர் பழங்களைக் கொடுத்தாலும் அப்போதே உடனிருப்போருக்குப் பகிர்ந்து அளித்து விடுவார். தம்மிடம் பிறரைப் பற்றி யாரும் குறைவாகப் பேசுவதற்கு அனுமதிக்க மாட்டார். சிறெல்லாம் தூற்றிச் சிறுமை புறங்காப்பது அவர் இயல்பு.

வாய்மையும் தூய்மையும், எளிமையும் கடைப்பிடித்த தமிழ்க் காந்தி என அவரைச் சொல்லலாம். துணைவேந்தர் பதவிக் காலத்திலும் தூய்மையான வாழ்க்கை, எளியஉடை, காட்சிக்கு எளிமை தேவைகளை மிகவும் குறைத்துக் கொள்ளல் ஆகியவற்றைக் கடைப்பிடித்தார்.

தம் பணிகளைத் தாமே செய்து கொள்வார். எந்த நேரத்திலும் தம் சொந்த வேலைக்குப் பிறர் துணையை நாடாமல் தாமே முடிப்பார்.

எளிய உணவு, இயற்கை மருத்துவம், தாய் மொழிக் கல்வி, முதலியவற்றில் இயல்பாகவே ஈடுபாடு மிக்கவர். தாம் எழுதும் முன்னுரைகளில் கூட புத்தம் புதிய உவமைகளைப் படைப்பது அவர் இயல்பு.

சங்கப் புலவரனைய சான்றோராக வாழ்ந்த மாணிக்கனார் தெளிவான சிந்தனையும், கொள்கையில் உறுதியும், வெளியிடுவதில் துணிவும் கொண்டு தந்நிகரில்லாத் தமிழ்ப் பேராசிரியராகத் தமிழகத்திற்கு வழிகாட்டியாக விளங்கினார்.

தமிழ் வழிபாட்டுத் தொண்டினை இறைவழிபாடாக கொண்டவர். பிள்ளையார் சுழிக்குப் பதில் "த" என்று தொடங்குவது இவரியல்பு. த-தமிழைக் குறிக்கும்.

நாடு, மொழி, இனம், அரசு, சமுதாயம், சமயம், கல்வி. பற்றிய இவர் தம் சிந்தனைகள் அனைத்தையும் மிகத் தெளிவாகத் 'தமிழ்க்கதிர்' என்னும் நூலில் விளக்கியுள்ளார்.

சிந்தனைகளில் கொள்கைத் தெளிவும் உறுதியும் பளிச்சிடக் காணலாம். இந்நூலில் தம்முடைய வாழ்க்கைக் கொள்கைகளையும் அறுதியிட்டு உறுதி செய்துள்ளார்.

நன்றி: மணிவாசகர் பதிப்பகம் வெளியிட்டுள்ள "வ. சுப. மாணிக்கனாரின் வாழ்வும் பணியும்"

வள்ளுவம் தந்த மாமணி

கவியரசு முடியரசன்

போதும் எனுமனம் பூத்த நெஞ்சினன்,
யாதும் அவாவிலன், யாமையென் றடங்கியோன்,
பயனில சொல்லாப் பாவலன், என்றும்
நயனுள மொழியும் நாவலன், என்பால்

ஈடிலா அன்பன், எளியன், இனியன்,
கேடிலா மனத்தன், கிளர்ச்சித் தலைவன்,
எங்கள் சங்கப் புலவன் இவனெனப்
பொங்கும் உணர்வாற் பொலிந்த பெற்றியன்
பெருக்கிய புகழ்நிலை பேணிவந் துறினும்

செருக்கே அறியாச் சீர்மை யாளன்,
அருமை! அருமை! என் றான்றோர் போற்றும்
பெருமிதங் குன்றாப் பேரறி வாளன்,
தொல்காப் பியநூல் துருவித் துருவிப்
பல்கால் ஓதிப் பாங்குற மொழிந்தவன்,

உள்ளந் தெளிவுற உலகம் மகிழ்வுற
வள்ளுவந் தந்த மாமணி, நாளும்
சிந்தனைப் புதுமையைச் செவ்விதிற் காட்டும்
செந்தமிழ் நடையிற் சீரியன், கூரியன்,
ஆள்வோ ராகினும் அவர்க்கும் அறிவுரை

கேள்போல் நின்று கிளத்தும் துணிவன்,
ஆசாற் றொழுதெழும் அரும்பெறல் மாணவன்,
பேசான் பழிமொழி, ஏசான் பிறரை,
நண்டன், பண்பன், நயத்தகு தமிழைக்
கண்ணென உயிரெனக் கருதும் இயல்பினன்,

கல்வியைத் தமிழிற் கற்கத் தடையெனில்
அல்வினை யதுதான் அழிகவென் றெழுந்து
வல்வில் லம்பெனச் சொல்லமர் தொடுத்தனன்,
அமர்க்களம் சென்றவன் ஆங்கே மாண்டனன்,
எமர்க்கெலாம் துயரே ஏற்றினன், ஐயஓ!

யாவன் அவனென வினவின், தீவினை
செய்யாச் செம்மல் செந்தமிழ்ப் பெம்மான்
பொய்யா மாணிக்கப் புலவன் அவனே.

நன்றி: மணிவாசகர் பதிப்பகம் வெளியிட்டுள்ள
''வ. சுப. மாணிக்கனாரின் வாழ்வும் பணியும்''



செய்திகள் வாசிப்பவர்...

எல். சுந்தரம்

ஃ கோனபட்டு அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் திருப்பணிகள் செய்யப்பெற்று 29-4-90 (பிரமோதூத சித்திரை 16 உ) ஞாயிறன்று காலை 6-10 லிருந்து 7-00 மணிக்குள் குடநீராட்டு நடைபெற உள்ளது.

ஃ காரைக்குடியில் 6-4-90 முதல் 8-4-90 வரை மூன்று நாட்களும் 9-4-90 அன்று நாட்டரசன்கோட்டையிலும் கம்பன் திருநாள் கொண்டாடப் பெற உள்ளது.

ஃ மதுரை வங்கியின் தலைவர் திரு. சுப. சபாபதி அவர்களுக்கு 9-3-90 அன்று தெற்கு வட்டகை நகரத்தார் சார்பாக நாட்டரசன் கோட்டையிலும் 10-3-90 அன்று அரண்மனை சிறுவயலிலும் பாராட்டு விழாக்கள் நடைபெற்றன.

ஃ பட்டமங்கலம் ஸ்ரீ மதியாத கண்ட விநாயகர் ஸ்ரீ அழகு சௌந்தரி அம்பாள் பங்குனித் திருவிழா 30-3-90 பூச்சொரிதலைத் தொடர்ந்து 31-3-90 முதல் 9-4-90 வரை 10 நாட்கள் நடைபெற உள்ளது.

ஃ வைகாசி விசாகத்தன்று (6-6-90) குன்றக்குடி அருள்தரு சண்முகப் பெருமான் சன்னதியில் தேவகோட்டை தத்புருஷ தேசிகர் அவர்களுக்கு தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் பாராட்டுச் செய்ய இருக்கிறார்கள்.

ஃ மதுரையில் சித்திரைத் திருவிழாவையொட்டி 5-5-90 அன்று திக் விஜயமும் 6-5-90 அன்று மீனாட்சி திருக்கல்யாணமும் 8-5-90 அன்று தல்லாகுளத்தில் எதிர்சேவையும் 9-5-90 அன்று வைகை ஆற்றில் கள்ளழகர் இறங்கும் நிகழ்ச்சியும் நடைபெற உள்ளன.

ஃ கோவிலூர் மடாலயத்தில் 8-4-90 ஞாயிறன்று உத்திர நட்சத்திரத்தில் ஸ்ரீ சச்சிதானந்த சிவசொரூபமாய் விளங்கும் ஆண்டவருக்குக் குருபூஜை நடை-

பெற உள்ளது.

ஃ பட்டதாரி இளைஞரான திரு. இராஜேந்திரன் காரைக்குடியில் 'சொர்க்கம்' என்ற பெயரில் நம்மினத்தவருக்காக திருமணத் தொடர்பு நிலையம் ஒன்றினை நடத்தி வருகிறார்.

ஃ சென்னை முகப்பேர் மேற்கு ஆறுவது ஏழாவது பகுதிகளின் பொது நல மன்ற ஆலோசகராக காரைக்குடியைச் சேர்ந்த திரு. எம். அன்புமணி ஒருமனதாகத் தேர்வு செய்யப் பெற்றுள்ளார்.

ஃ கண்டவராயன்பட்டி ஊராட்சி மன்றத் தலைவரும் அருள்நெறித் திருக்கூட்டச் செயலாளருமான நா. அருணாசலன் அவர்களின் 80 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு 7-4-90 அன்று பிள்ளையார்பட்டியில் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமையில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற உள்ளன.


வழி நடைப் பயண அன்பர்களுக்குப் பொன்னாடை, விருந்து

இராமேஸ்வரத்திலிருந்து காசிக்கு வழிநடைப் பயணம் மேற்கொள்ளும் அன்பர்கள் 19 பேர் 6-3-90 அன்று தேவகோட்டை வந்தபோது தேவகோட்டை திரு. வீர. பள. ஏ. அண்ணாமலை செட்டியார், அவர்களுக்குக் கதர் ஆடை அணிவித்துச் சிறப்பித்தார்.

புனிதப் பயணம் மேற்கொள்ளும் அன்பர்கள் மற்றும் சுமார் 100 பேருக்கு அன்று மதியம் தமது இல்லத்தில் திரு. செ. வீர. ஏ கண. சந்திரசேகர் விருந்தளித்து உபசரித்தார்.



காரைக்குடியில் பல ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற கம்பன் திருநாள் நிகழ்ச்சி ஒன்றில் (இடமிருந்து வலமாக) திருமதி உமையாள் இராமநாதன், தமிழக முதல்வர் கலைஞர் மாண்புமிகு மு கருணாநிதி அவர்கள், கம்பன் அடிப்பொடி திரு. சா. கணேசன், தொழிலதிபர் திரு. ஜி. கே. சுந்தரம்.



தேவகோட்டை சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர், பாலகவி வே இராம நாதன் செட்டியார் - திருமதி மீனாட்சி ஆச்சியின் பவள விழா தேவ கோட்டையில் 23-12-89 அன்று சீரும் சிறப்புமாக நடைபெற்றது. ஆன்றோர்களும் சான்றோர்களும் கூடி விழாவைச் சிறப்பித்தனர். பவள விழாத் தம்பதியருடன் சீடர் நாட்டரசன்கோட்டை சிவத்திரு குப. சொக்கலிங்கம்.

பனையப்பட்டியில் நீதிமன்ற நிகழ்ச்சி

பனையபட்டி சுப்பையா சுவாமி கோவில் மகேஸ்வர பூஜையில் 3-3-90 அன்று பாத்திரங்களாக வேடமிட்டு வாதிட்ட புதுமையான நீதிமன்ற நிகழ்ச்சி நடந்தது.

டாக்டர் ஆ. செகநாதன் நீதிபதியாகவும் செந்தமிழ்ச் செல்வி சு. சரசுவதி அரசு வழக்கறிஞராகவும், திண்டுக்கல் அழகிரிசாமி கர்ணனாகவும், மக்கள் கவிஞர் அரு. நாகப்பன் தருமனாகவும் பழநிச் சிங்கார வேலு கண்ணனாகவும் திண்டுக்கல் எஸ். சிவா பதிவாளராகவும் வேடமிட்டு சுவையாக வாதிட்டனர்.

நடுவர் தருமனை விடுதலை செய்து தீர்ப்பு வழங்கினார் திரு. சம்பந்தம் செட்டியார் வரவேற்றார். திரு. முத்துப்பழநியப்பன் நன்றி கூறினார்.

இளைஞர் நற்பணி மன்றத்திற்குப் புதிய நிர்வாகிகள்

காரைக்குடி நகரத்தார் நற்பணி மன்றத்திற்குப் புதிய ஆண்டிற்கு திரு. பி. எஸ். ஆர்எம். ஏ. இராமசாமி தலைவராகவும் திரு. எம்ஆர் நாராயணன், திரு. மெ. கருணாநிதி இருவரும் துணைத் தலைவர்களாகவும் திரு. கே. ஆர். நாராயணன் செயலாளராகவும் திரு. எஸ் வள்ளியப்பன் திரு. கேடி. கதிரேசன் இருவரும் துணைச் செயலாளர்களாகவும் திரு. என். பி. இராமசாமி பொருளாளராகவும் மற்றும் 13 பேர் செயற்குழு உறுப்பினர்களாகவும் 5 பேர் புத்தக வங்கி உறுப்பினர்களாகவும் தேர்வு செய்யப் பெற்றனர்.

தங்கப் பதக்கம் பெற்ற எஸ்பி. முருகப்பன்

தமிழ்நாடு மாநில அளவிலான தடகள விளையாட்டுப் போட்டி நெய்வேலியில் 22-1-90 & 23-1-90 ஆகிய இரு நாட்கள் நடைபெற்றது. இதில் திரு. எஸ்பி முருகப்பன் நீளம் தாண்டுதலில் (Long Jump) வெண்கலப் பதக்கமும் மும்முறை தத்தித் தாவும் (Triple Jump) போட்டியில் தங்கப் பதக்கமும் பெற்றார். இவர் நீளம் தாண்டுதலில் 6. 40 மீட்டர் தூரம் தாண்டி மூன்றாவது இடத்தையும் மும்முறை



தத்தித் தாவும் போட்டியில் 14. 01 மீட்டர் தூரம் தாண்டி முதல் இடத்தையும் பெற்றார்.

இவர் மும்முறை தத்தித் தாவும் போட்டியில் 14. 01 மீட்டர் தூரம் தாண்டியதால் அகில இந்தியப் பள்ளி அளவிலான தடகள விளையாட்டுப் போட்டிக்குத் தேர்வு செய்யப் பெற்றார். அந்தப்போட்டி கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் 12-2-90 முதல் 16-2-90 வரை நடைபெற்றது. 15-2-90 அன்று அங்கு நடைபெற்ற மும்முறை தத்தித் தாவும் போட்டியில் திரு. எஸ்பி. முருகப்பன் 14 27 மீட்டர் தூரம் தாண்டி அகில இந்திய அளவில் முதல் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தை வென்றார். அதற்காக அவரை நாம் பாராட்டுகிறோம்.

திரு. எஸ்பி. முருகப்பன் கண்டவராயன்பட்டி திரு. முரு. கப்பையா செட்டியார் - மல்லிகா ஆச்சியின் புதல்வர். இளையாத்தக்குடி கழனிவாசல் பிரிவைச் சேர்ந்தவர். 18 வயதுடைய இவர், தேவகோட்டை தே பிரித்தோ மேனிலைப் பள்ளியில் பிளஸ் 1 படித்து வருகிறார்.

ஆண்கள் எப்போதும் பையன்களே !

பள்ளியில் படிக்கும்போது மாணவர்கள் புத்தகப் பையைத் தூக்கித் தூக்கிப் 'பையன்கள்' ஆனார்கள் !

கல்யாணம் ஆனபின்பு ஆண்கள் வீட்டுச் சாமான்களைப் பையில் தூக்கித் தூக்கிப் 'பையன்கள்' ஆகிறார்கள்!

— புலவர் மாமணி
மா. முத்துராமன்

(மேலைச்சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் நடைபெற்ற நிறுவியோர் நினைவு விழா வழக்காடு மன்றத்தில்)

திருமணம்

கர்நாடக மாநில நகரத்தார் சங்கத்தின் பொருளாளர் நாச்சியாபுரம் கவிஞர் இராம. வே. சேதுராமன் செட்டியார் அவர்களின் புதல்வன் இராமையா B.Sc., C.A. (Final)க்கும் கல்லல் சோம. மீனாட்சி சுந்தரம் செட்டியார் அவர்கள் புதல்வி வள்ளி மீனாளுக்கும் 12-2-90 அன்று கல்லலில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

மாணிக்கனுர் பற்றி மாணிக்கம்!

''அமரர், தமிழறிஞர், முனைவர் வ. சுப. மாணிக்கனுர் அவர்களின் நினைவு தினம் வருகிறது. எனவே அவர்களைப் பற்றி நீங்கள் அறிந்த சில செய்திகளைச் சொல்லுங்களேன்'' என, மதுரை நகரத்தார் இளைஞர் சங்கத்தின் தலைவரும் மதுரை நகரத்தார் சங்கத்தின் செயலாளர்களில் ஒருவருமான கண்டரமாணிக்கம் தந்த திரு. எம். சிஎன். மாணிக்கம் அவர்களைச் சந்தித்துக் கேட்டேன். அப்போது அவர்கள் வ. சுப. மாணிக்கனுர் அவர்களின் சில நல்ல குணங்களைப் பாராட்டிச் சொன்னுர்கள்.

அவர்கள் கூறியதாவது :-

1982 ஏப்ரலில் இலங்கையில் இந்து சமய அற நிலைய மாநாடு நடந்தது. அப்போது நான் இலங்கையில் இருந்தேன். மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்த அப்போதைய தக்கரர் வி. என். சிதம்பரம் செட்டியார் அவர்கள், அப்போதைய பல்கலைக் கழகத் துணை வேந்தர் வ. சுப. மாணிக்கனுர் அவர்கள், பேராசிரியர் முனைவர் தமிழண்ணல் அவர்கள், பேராசிரியர் முனைவர் ச. மெய்யப்பன் அவர்கள் போன்ற நல்லவர்களைச் சந்தித்துப் பேசவும் புதுக் கதிரேசன் கோவிலில் அவர்களுக்கு ஒரு விருந்து கொடுக்கவும் எனக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது.

வ. சுப. மாணிக்கனுர் அவர்கள் காஃபியை விரும்பி அருந்துவார்கள். கொழும்பில் எங்கள் இல்லத்தில் அளித்த காஃபியை அருந்தியபோது ''மூன்று நாட்களுக்குப் பிறகு இப்போதுதான் நல்ல காஃபி கிடைத்திருக்கிறது'' என்றுர்கள்.

1982ல் கொழும்பில் 12 நகரத்தார் குடும்பங்கள் மட்டுமே இருந்தன. இதைத் தெரிந்து கொண்ட மாவன்னு அவர்கள் ''இங்குள்ள நகரத்தார்கள் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ளக்கூடாது. அடுத்த நூற்றுண்டில் இங்கு ஆயிரம் குடும்பங்கள் இருக்க வேண்டும். இலங்கை முன்போல் செழிப்பாக இருக்க வேண்டும்'' என்று தமது விருப்பத்தைத் தெரிவித்தார்கள்.

மாவன்னு அவர்கள் தாயகம் திரும்பியபிறகு 4-5-82 தேதியிட்டு இலங்கைக்கு எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்கள். அதில்-

நலம். கொழும்பு இந்து மாநாட்டில் கலந்துகொண்டு கதிர்காமம் முதலிய இடங்கட்குச் சென்று நானும் என் மனைவியும் ஏப்ரல் 29ல் நலமாகத் தாயகம் வந்து சேர்ந்தோம்.



எங்கள் வருகைக்கெனச் சிறப்பாக நகரத்தார் கூட்டம் கூட்டியிருந்தீர்கள். சிலரையாவது ஒரு சேரப் பார்க்க முடிந்தது மகிழ்ச்சி தந்தது. நீங்கள் தெரிவித்தபடி இங்கு கொழும்பு நகரத்தார் அற நிலையம் அமைக்கப் பாருங்கள்.

தங்கள் அன்புக்கு நன்றியும் வாழ்த்தும்.

— இவ்வாறு அவர்கள் எழுதியிருந்தார்கள்.

மாவன்னு அவர்கள் இலங்கை வந்திருந்தபோது ஒரு தேங்காய் எண்ணெய்க் குப்பி வேண்டும் என்ருர்கள். வாங்கிக் கொடுக்கச் செய்தேன் அவர்கள் தாயகம் திரும்பிய பிறகு எழுதிய கடிதத்தில் ''நீங்கள் வாங்கிக் கொடுத்த தேங்காய் எண்ணெய்க்கு விலை எவ்வளவு என்று தெரிவித்து அத்தொகையை இங்கு யாரிடம் கொடுக்க வேண்டும் என்று எழுதினுல் அத்தொகையை அவர்களிடம் கொடுக்கின்ருேம்'' என்று எழுதியிருந்தார்கள். தேங்காய் எண்ணெய் பற்றிய அவர்களுடைய கேள்விக்கு நான் பதில் ஒன்றும் எழுதவில்லை.

மாவன்னு அவர்கள் எதிலும் நேர்மையாக இருப்பார்கள்; பிறருடைய பொருளுக்கு ஆசைப்பட மாட்டார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டு தான் அந்த தேங்காய் எண்ணெய்க் குப்பி விஷயம்.

— இவ்வாறு எம். சின்ன. மாணிக்கம் அவர்கள் தெரிவித்தார்கள்.

நேர்முகம் : எல். சுந்தரம்

பலவான்குடி சிவன் கோயில் குடமுழுக்கு விழா

பலவான்குடி நகரத்தார் நற்பணி மன்றம், பலவான்குடி நகரச் சிவன் கோவிலின் திருப்பணி வேலைகளைச் செய்து குடமுழுக்கு விழா நடத்த ஏற்பாடு செய்து வருகிறது.

இதற்காக திரு. ப. வ. ச. வயிரவன் செட்டியாரைத் தலைவராகவும் திரு. சு. க. வீர. சுப்பிரமணியன் செட்டியார், திரு. ராம. சோலைமலைச் செட்டியார் இருவரையும் செயலாளர்களாகவும் திரு. பழ, சங்கர நாராயணன் செட்டியாரைப் பொருளாளராகவும் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

பலவான்குடி நகரச் சிவன் கோயிலின் குடமுழுக்கு விழா *3-6-90* (பிரமோதூத ஆண்டு வைகாசித் திங்கள் 20ஆம் நாள்) ஞாயிற்றுக் கிழமை நடத்தப்பட இருப்பதாகவும் மேற்படி நற்பணி சிறப்புற நிறைவேற திரு. ப. வ. ச. வயிரவன் செட்டியார், தலைவர், நகரத்தார் நற்பணிமன்றம், பலவான்குடி-623 208 என்ற முகவரிக்கு நகரத்தார் பெருமக்கள் நன்கொடைகளை அனுப்பி உதவுமாறும் கேட்டுக் கொள்ளப் பெறுகிருர்கள்.

உங்கள் குரல்

மார்ச்'90 இதழில் 'பகட்டும் வீண் செலவும்' என்ற தலைப்பிட்டு முனைவர் தமிழண்ணல் அவர்கள் மாப்பிள்ளைப் பலகாரம் பற்றி எழுதிய கருத்து மிகமிக அற்புதம். முதல்வர் பேராசிரியர் ஒருவர் சம்பந்தி ஆன புதிதில் மாப்பிள்ளைப் பலகாரத்தை சம்பந்தி வீட்டுக்கு எடுத்துச் சென்று பட்டபாட்டை படித்து உணர்ந்த பிறகாவது நம்மினத்து ஆச்சிமார்கள் மாப்பிள்ளைப் பலகாரம் கொடுப்பதையும் வாங்குவதையும் நிறுத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

அரு. தெய்வானை
கீழப்பூங்குடி

பகட்டுக்காக வீண் செலவு செய்துவரும் நம்மவர்களுக்குச் சாட்டையடி கொடுத்துள்ளார் முனைவர் தமிழண்ணல் அவர்கள். இனிமேலாவது திருமணம் போன்ற நிகழ்ச்சிகளில் நம்மவர்கள் சிக்கனமாக இருந்து பெண்ணைப் பெற்றவர்களைக் காப்பாற்றுவார்களாக!

ஆர்எம். வி. இராமசாமி
கோட்டையூர்

மார்ச்'90 இதழில் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள் நினைவாக ஏராளமான கவிதைகள், செய்திகள் வெளியிட்டமை பாராட்டுக் குரியது. கொல்லங்குடி உடையப்பாவின் அஞ்சலிக் கவிதை சிறப்பாக இருந்தது.

சுப. வள்ளியம்மை
மண்ணடி, சென்னை

'பகட்டும் வீண் செலவும்' என்ற தலைப்பில் தமிழண்ணல் அவர்கள் எழுதிய கட்டுரையும் 'பெண்களே, பெண் இனத்தை மதிக்க வேண்டும்' என்ற தலைப்பில் மணிவண்ணன் எழுதிய கட்டுரையும் மார்ச்'90 ''நகரத்தார் குரல்'' இதழுக்குப் பெருமை சேர்த்துள்ளன. செட்டிமார்கள் வீணுகப் பகட்டாமலும் வெட்டிப் பேச்சுப் பேசாமலும் மகள் - மருமகள் வித்தியாசம் பாராமல் நடத்தவும் வாழக் கற்றுக்கொண்டால்தான் வரும் காலத்தில் நம் சமூகம் தழைக்கும்.

'ஹால்ஸ்' நாராயணன்
கண்டவராயன்பட்டி

அண்ணன் வி. என். சிடி. அவர்களின் பயணக் கட்டுரை மார்ச்'90 இதழில் சிறப்பாக இருந்தது. டாக்டர் ராஜேந்திரன் அவர்களுடன் இவர்களுக்குள்ள ஈடுபாடு நெஞ்சை நெகிழ்வித்தது. திரு. தமிழண்ணல், திரு. மணிவண்ணன் ஆகியோரின் கட்டுரைகளும் காரை தந்த கற்பகம் சா. கணேசனரின் கட்டுரையும் சிறப்பாக அமைந்திருந்தன.

டாக்டர் என். என்
கண்ணப்பன்
மதுரை

மார்ச் 90 இதழ் சிறப்பாக இருந்தது. தமிழண்ணல் அவர்கள். எழுதும் தொடர்கட்டுரைகளைப் படித்து நம் இளைஞர்கள் சிந்தித்தால் நல்லது. 50 ஆண்டுகளுக்கு முன்னரே, சொ. முருகப்பா, இராய. சொ., மகிபாலன்பட்டி மு. சின்னையாச் செட்டியார் (பண்டிதமணியின் சகோதரர்) ஆ. தெக்கூர் சுப. அருணகிரி, தேவகோட்டை இராமநாதன் செட்டியார் இன்னும் பல முற்போக்கான நகரத்தார்கள், சீர்திருத்தத் திருமணங்களுக்காகவும், திருமணத்தில் ஏற்படும் வீண் செலவுகளைக் குறைக்கவும் அரும்பாடுபட்டார்கள். அவர்களது முயற்சிகள் வெற்றி அடையவில்லை. இப்போது கொடுக்கல், வாங்கல் முறைகள் மேலும் அதிகமாகிவிட்டன. அவைகளினுல்

வீண் செலவும் சிரமமும், மன வேற்றுமையும்தான் ஏற்படு கிறது. இயன்றவரையில் வீண் செலவுகளைக் குறைத்து, வேறு நல்ல வழிகளில் அந்தத் தொகை யைச் செலவு செய்தாலே நம் இனம் முன்னேறி விடும். இனிமேலாவது சிந்தித்துச் செயல்பட்டால் நல்லது.

மேலைச்சிவபுரி முத்துராமன்
திருச்சூர்

குழந்தைக் கவிஞரை மறவாது அவர்களது நினைவு தினத்தில் கவிதைகள், செய்திகளை வெளியிட்ட ''நகரத்தார் குர'' லுக்குப் பாராட்டுக்கள்.

எஸ். அண்ணாமலை
சேலம்

காவிரிப்பூம்பட்டின நகர விடுதி: சாப்பாட்டுக் கூட கால்கோள் விழா!

காவிரிப்பூம்பட்டினம் நகர விடுதியில் உள்ள சாப்பாட்டுக் கூடத்தை விரிவுபடுத்தி புதிதாகக் கட்ட, ஸ்ரீ விசாலம் சிட் பண்ட் லிட் நிறுவனத்தின் முதுநிலை மேலாளரும் காவிரிப்பூம் பட்டின நகரவிடுதிக் கட்டிட விஸ்தரிப்புக் குழுவின் தலைவருமான 'இரசிகமணி' ஆர் எம். சிதம்பரம் செட்டியார் அவர்கள் தலைமையில் காவிரிப்பூம்பட்டினத்தில் 6-3-90 அன்று தச்சு செய்யப் பெற்றது.

அவ்விழாவில் மேற்படி கட்டிட விஸ்தரிப்புக்குழுவின் துணைத் தலைவர் பொன். புதுப்பட்டி திரு. நாகு. ராம. இராமசாமிச் செட்டியார், செயலாளர் திரு. வெஸ்ட் வயிரவன் செட்டியார், பொருளாளர் திரு. ஏஆர். முத்துச் செட்டியார், கண்டனூர் நா. அரு. கா. அருணாசலம் செட்டியார், காரைக்குடி பழ. தெ லெ அருணாசலம் செட்டியார் திரு. என். மோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேற்படி கட்டிட வேலை 15-3-90 அன்று தொடங்கப்பட்டுள்ளது என்றும் 29-6-90 (ஆனி மீ 15 உ) அன்று அது முடிவு பெற்று ஆடி மாதம் பட்டினத்தடிகளின் அற்புதத் திருவிழாவின்போது திறப்பு விழா நடைபெறுமென்றும் 'இரசிகமணி' ஆர் எம். சிதம்பரம் செட்டியார் அவர்கள் தெரிவித்தார்கள்.

மேற்படி கட்டிடம் இரண்டரை இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப் பெறுவதாகவும் காரைக்குடியைச் சேர்ந்த பொறியாளர் திரு. எஸ். சுப்பிரமணியன் செட்டியார் அதனைப் பொறுப்பேற்றுச் செய்து வருவதாகவும் அவர்கள் மேலும் கூறினார்கள்.

மேற்படி கட்டிட நிதிக்கு நன்கொடை அனுப்ப விரும்புவோர் 'காவிரிப்பூம்பட்டின நகர விடுதிக் கட்டிட விஸ்தரிப்புக் குழு' என்ற பெயரில் பாங்க் டிராப்ட் அல்லது செக் மூலமாக அதன் தலைவர் ஆர்எம். சிதம்பரம் செட்டியார் அவர்கள் முதுநிலை மேலாளர், ஸ்ரீ விசாலம் சிட் பண்ட் லிட்., 54, கீழ வெளிவீதி, மதுரை-625001 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள்.

மேற்படி சாப்பாட்டுக் கூடத்தில் 12 மின் விசிறிகளும் 16 குழல் விளக்குகளும் அமைக்க நன்கொடை அளிக்க விரும்புவோர் மின் விசிறி ஒன்றுக்கு ரூ. 800 வீதமும் குழல் விளக்கு ஒன்றுக்கு ரூ 150 வீதமும் 'இரசிகமணி' ஆர்எம். சிதம்பரம் செட்டியார் அவர்களிடம் ரொக்கம் அளிக்கலாம் எனத் தெரிவிக்கப் பெறுகிறது.

வ. சுப. மாணிக்கனார் : சில நினைவுகள்

-- இராம. விசுவநாதன் --

வள்ளுவம் வாழ்க்கை நூல். வாழ்க்கையில் பல நிலைகள் உண்டு. இன்ப-துன்பங்கள் எதுவாக இருப்பினும் குறட் கருத்துக்களைக் கைக் கொண்டால் நன்மைகள் பெருகும்; தீமைகள் விலகும். வள்ளுவத்தை வாழ்வில் மேற்கொண்டு வளம் பல கண்டவர் நமது செம்மல் மூதறிஞர் வ. சுப. மாணிக்கனார் அவர்கள். அவர்களது வாழ்க்கை அனுபவங்கள் நம் வாழ்க்கையைச் செம்மைப் படுத்திக் கொள்ள உதவும்.

''பொய் சொல்ல இயலாது'' என்று தாம்பணிபுரிந்த முதலாளியிடமே கூறி அதனால் வேலை இழந்து இரங்கூனிலிருந்து தாயகம் திருப்பிய அவர்கள், பொய் சொல்லாது வாழ்க்கை நடத்த ஏற்ற துறை ஆசிரியர் தொழிலே என்று முடிவு செய்து, தமிழ் பயின்று, அத்தொழிலுக்கு வந்தார்கள்.

அருட்பெருஞ்சோதி, கருணை வள்ளலார் சிதம்பரத்தில் ஆடல் வல்லான் சன்னதி மேடையில் நின்று திருவாசகப் பாடல்களைப் பாடும்போது கீழே இறக்கிவிடப் பட்டார் என்பது செய்தி இதனை வ. சுப. மா. அவர்கள் நினைவில் கொண்டு தமிழை அம்பலத்தில் நின்று பாடலாம் என்பதற்கு வழி வகுத்தார்கள்.

ஒரு முறை மாவன்னா அவர்கள் ''தாய்மொழி வழிக் கல்வி பற்றிச் சிந்திக்காது அயர்ந்துவிட்டால் இன்னும் 10 ஆண்டுகளில் தமிழகத்தின் ஆட்சி மொழியே ஆங்கிலமாக மாறிவிடக்கூடும்'' என்று என்னிடம் கூறினார்கள். அடுத்து ''தமிழக முதல்வர் கலைஞர் அரசியல் ஆதாயங்களை மறந்து தமிழ்ப் பண்பாட்டை அரசியலில் இருந்துகொண்டே ஒருமை மனத்துடன் நினைத்தால் இக்கணமே தமிழ் பயிற்சி மொழியாகும்'' என்ற கருத்துப்படக் கூறினார்கள்.

நான் ஆசையோடு அவர்களிடம் ''தங்களைக் கல்வி அமைச்சராக நியமித்துவிட்டால் செந்தமிழ்ப் பயிர் செழித்து வளரும்; சிந்தனைத் திறன் பெருகும். 'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே; அதைத் தொழுது படித்திடடி பாப்பா' என்ற பாரதியின் வாக்கு மெய்யாகும்'' என்றேன். அதற்கு அவர்கள் ''தமிழறிந்த கலைஞர் பயிற்சி மொழியாகத் தமிழைக் கொணர்வார்; எனினும் நாம் ஓராயிரராவது சிறை செல்ல வேண்டும்'' என்றார்கள்.

''வாழ்க்கை ஆயிரம்' என்ற வெண்பா நூல் ஒன்று எழுதுவதாகச் சொன்னீர்களே எழுதி விட்டீர்களா?'' என்று அவர்களிடம் கேட்டேன். ''இதனையெல்லாம் நினைவு படுத்துவது சரியே. 'இன்று எழுதியுள்ள தமிழ்ப் புத்தகங்களையே வருங்கால இளைஞர்கள் பயன்படுத்துவார்களா' என்ற பேரச்சம் என் மனத்தகத்தே உள்ளது. சிந்தித்து எழுதலாம் என இருக்கிறேன். தமிழ் மொழியைக் காப்பாற்றி அன்றோ பிற செயல்கள் புரிய வேண்டும்'' என்றார்கள்.

வாய்மை, ஒழுக்கம், கட்டுப்பாடு, நேர்மை இவற்றின் வழி, வாழ்வில் வெற்றி பெற்றவர் வ. சுப. மாணிக்கனார் அவர்கள். நாமும் நம் தமிழக மக்கள் அனைவரும் இத்தகு சிறப்பினை அடைய தமிழ் வழிக் கல்வியே உதவும். மாணிக்கனார் அவர்களின் எண்ணங்களை தமிழறிஞரைத் தமிழக முதல்வராகப் பெற்றுள்ள தமிழக அரசு விரைவில் நிறைவேற்றும் என நம்புவோம்.

நகரத்தார் பயிற்சி மையம்

நகரத்தார் ஆசிரியர்களைக் கொண்டு நகரத்தார் மாணவர்களுக்காக நடத்தப்படும் நகரத்தார் பயிற்சி மையத்தில் +2 தேர்வு எழுதியுள்ள மாணவர்களுக்கு நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி வகுப்புகள் 23-4-90 முதல் 23-5-90 வரை காலை 9மணி முதல் 1மணிவரை மதுரை தெப்பக்குளம் தியாகராசர் நன்முறை மேல்நிலைப் பள்ளியில் நடைபெற உள்ளன என்றும் கட்டணம் ரூ. 150 செலுத்திப் பெயரை பதிவு செய்து கொள்ளுமாறும் —

வெளியூர் மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அஞ்சல் வழிப் பயிற்சியும் அளிக்கப்பட உள்ளது என்றும் அதன் வழி பயிற்சி பெறுபவர்களுக்கு ஒவ்வொரு வாரமும் முறையாக பாதுகாப்பாக பாடங்கள் அனுப்பப்படும் என்றும் இதற்குக் கட்டணம் ரூ. 125-00 என்றும் இந்த வகுப்பில் சேருவதற்குக் கடைசி நாள் 23-4-90 என்றும் நகரத்தார் மாணவர்கள் சேர்ந்து பயன் அடையுமாறும் அதன் அமைப்பாளர் திரு. பழ. இராமசாமி கேட்டுக் கொண்டுள்ளார்.

இயற்கை எய்தினர்

காரைக்குடி நகரத்தார் இளைஞர் நற்பணி மன்றத்தில் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக தலைவராக இருந்து நற்பணிகள் பல ஆற்றிய திரு. பேரா. நா. நாராயணன் 13-1-90 அன்று சென்னையில் இயற்கை எய்தினர். அன்னாரின் இறுதி ஊர்வலமும் நல்லடக்கமும் காரைக்குடியில் நடைபெற்றன. இரங்கற் கூட்டத்தில் காரைக்குடி நகர் மன்றத் தலைவர் திரு. சித சிதம்பரம் "நாதயா" முன்னாள் பொதுச் செயலாளர் திரு. எம் எஸ். முத்துராமன் நற்பணி மன்றப் பொருளாளர் திரு. என் பி. இராமசாமி ஆகியோர் புகழஞ்சலி செலுத்தினர். 25-2-90 அன்று நடைபெற்ற நற்பணி மன்றப் பொதுக்குழுக் கூட்டத்தில் அன்னாரின் மறைவுக்கு மௌன அஞ்சலி செலுத்தப் பெற்றது.

ஒளிப்படப் போட்டியில் பரிசுபெற்ற முத்துராமன்

மத்திய அரசின் செய்தி ஒலி பரப்புத் துறையின் ஒளிப்படப் பிரிவு 'Youth and women Development' என்ற தலைப்பில் நடத்திய இரண்டாவது தேசிய ஒளிப்படப் போட்டியில் திரு. வி. முத்துராமன் எடுத்த 'Rodeo' என்ற ஒளிப்படம் இரண்டாவது பரிசான ரூ. 7000/-ஐப் பெற்றுள்ளது. இதற்கான பரிசளிப்பு விழா புதுடில்லியில் 14-2-90 அன்று நிகழ்ந்தது.

கோவையில் தற்போது வசித்துவரும் திரு. வி. முத்துராமன் வேந்தன்பட்டியைச் சேர்ந்தவராவார். அவருக்கு நமது பாராட்டுக்கள்.

செகந்தராபாத்தில் முருகன் பூஜை

ஹைதராபாத் செகந்தராபாத் நகரத்தார் சங்கத்தின் சார்பாக செகந்தராபாத்தில் உள்ள செயின் மந்திரில் 26-1-90 அன்று முருகன் பூஜை சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. அவ்வமயம் கண்டனூர் இசைவேள் திரு. மாயாண்டியும் இசைத் தொண்டர் திரு. காசிநாதனும் பக்திப் பாடல்களைப் பாடினர்.

வழி நடைப் பயணம் செல்வோருக்கு வரவேற்பு

இராமேஸ்வரத்திலிருந்து காசிக்கு வழி நடைப் பயணம் செல்லும் அன்பர்கள் 7-3-90 அன்று காரைக்குடி நகரச் சிவன் கோயிலுக்கு வந்தபோது நகரத்தார் இளைஞர் நற்பணி மன்றத்தின் சார்பில் அவர்கள் பொன்னாடை போர்த்திச் சிறப்பிக்கப் பெற்றனர். திருஅமுதத் திட்டத்திற்கு ரூ. 51-00 நன்கொடை அளிக்கப் பெற்றது.

வழி நடைப் பயண அன்பர்களுக்கு வழி நெடுக வரவேற்பு

இராமேஸ்வரத்திலிருந்து காசிக்கு திருத்தொண்டர் திரு. ஆர். வயிரவன் தலைமையிலான 19பேர் கொண்ட குழு 1-3-90 அன்று பகல் 12-30 மணிக்கு இனிதே புறப்பட்டது. இராமேஸ்வரம் இராமநாதர் கோயிலில் நடந்த வழியனுப்பு விழாவிற்கு அக்கோயிலின் திருப்பணிக் குழு உறுப்பினர் திரு. சோம. நாராயணன் தலைமை தாங்கினர். 'காசிஸ்ரீ' திரு அரு. சோமசுந்தரன் வரவேற்று நடைப்பயணம் பற்றிய விவரங்களை எடுத்துரைத்தார். கோயில் அதிகாரிகள். இந்தியன் வங்கி அதிகாரிகள், மற்றும் ஏராளமான பொதுமக்கள் காசி செல்லும் அன்பர்களை வாழ்த்தி வழியனுப்பினர். திருத்தொண்டர் திரு. வயிரவன் தலையில் தீர்த்தக் குடத்தை இராமநாதசுவாமி கோயிலின் அதிகாரி திரு. கிருஷ்ணபிரசாத் வைத்தார். காரைக்குடி திரு. வி. அருணாசலம் செட்டியார் தலையில் இராமேஸ்வரம் கடல் மணல் பொட்டலத்தை 'காசிஸ்ரீ' திரு. திருநாவுக்கரசு செட்டியார் வைத்தார்.

பெங்களூரில் கைலாச ஆசிரமத்தில் இக்குழுவினருக்கு திருச்சி சுவாமிகள் 30-3-90 அன்று வரவேற்பும் ஆசியும் வழங்கினர்கள்.

பட்டமங்கலத்தில் மாசிக் கிருத்திகை விழா

பட்டமங்கலம் ஸ்ரீ தண்டாயுதபாணி நகரக் கோவிலில் கடந்த 3-3-90 மாசிக் கிருத்திகையன்று அன்னதான பூஜையும் 4-3-90 அன்று ஏலமும் நடைபெற்றன. விழாவில் உள்ளூர், மற்றும் வெளியூர் நகரத்தார் பெருமக்களும் பட்டமங்கலம் நகரத்தார் இளைஞர் குழுவினரும் பெருமளவில் பங்கு கொண்டு சிறப்பித்தனர்.

ஆன்மீகப் பெருமக்களுக்கு ஓர் அறிவிப்பு

அருள்மிகு முருகப் பெருமானின் திருப்பெயர்களில் ஒன்றினை 10,008 முறை எழுதியனுப்பும் பக்தர்களுக்கு அருள்மிகு சுவாமிநாத சுவாமியின் திருவுருவப் படம் ஒன்றும் திருவருட் பிரசாதமும் அனுப்பி வைக்கப்பெறும் என்றும் நுழைவு கட்டணமாக ரூ. 1-50க்கு அஞ்சல் வில்லைகள் அனுப்ப வேண்டுமென்றும் அனுப்பவேண்டிய கடைசி நாள் 31-5-90 என்றும் திரு. கே.ஆர். பழநியப்பன் அறிவித்துள்ளார். அனுப்ப வேண்டிய முகவரி: திரு. கே.ஆர். பழநியப்பன், 46 கும்பேஸ்வரன் வடக்கு, கும்பகோணம் - 612 001

குத்து விளக்கும் ஐந்து முகங்களும்

குத்து விளக்கிலுள்ள ஐந்து முகங்கள் பெண்களிடம் இருக்க வேண்டிய அன்பு, மனஉறுதி, நிதானம், சமயோசிதம், சகிப்புத் தன்மை ஆகிய தத்துவங்களை நினைவுபடுத்துகின்றன.

— ஆர். எம். அலமேலு
கோட்டையூர்

தோற்றம் : 1910 மறைவு : 1990

இதய அஞ்சலி

பொன். புதுப்பட்டி சித. மு. சிவலிங்கம் செட்டியார் அவர்கள்

20-2-90 அன்று சிவபதவி அடைந்து விட்டார்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

குடும்பத்தார்
பொன். புதுப்பட்டி

எக்ஸ்போ பிரிண்டர்ஸ் 20, கிருஷ்ணபுரம் 4-வது குறுக்குத் தெரு மதுரை-625 009 ல் அச்சிட்டு சுப. அ. நடராசன் அவர்களால் 25, வடக்குச் சித்திரை வீதி. மதுரை-625 001லிருந்து வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : வி. என். சிதம்பரம்

காரைக்குடியில்
முத்தம்மாள் ஆச்சி - சிதம்பரம் செட்டியார்
திருமண மண்டபத் திறப்பு விழா!

காரைக்குடியில் 118 அருணாசலம் செட்டியார் வீதியில் (செக்காலை தலைமைச் சாலை - வருமான வரி அலுவலகம் அருகில்) சகல வசதிகளுடன் புதிதாகக் கட்டப் பெற்றுள்ள முத்தம்மாள் ஆச்சி - சிதம்பரம் செட்டியார் திருமண மண்டபத் திறப்பு விழா பிரமோதூத ஆண்டு சித்திரைத் திங்கள் 17ஆம் நாள் (30-4-1990) திங்கட்கிழமை காலையில் நிகழவிருக்கிறது

ஸ்ரீ விசாலம் சிட் பண்ட் லிமிடெட்டின்
நிர்வாக இயக்குநர்
உயர்திரு ஆர்எப். அருணாசலம் அவர்கள்
திருமண மண்டபத்தைத் திறந்து வைக்கவும்

அவர்களது துணைவியார்
திருமதி அரு. மீனாட்சி ஆச்சி அவர்கள்
திருவிளக்கேற்றிச் சிறப்பிக்கவும்

அன்புடன் இசைவு தந்துள்ளார்கள்.

விழாவில் கவிஞர்கள், புலவர்கள், பேராசிரியர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்க இருக்கிறார்கள்.

அனைவரும் வருக! **சிறப்புத் தருக!**

திருமண மண்டபத்தில் மங்கல நிகழ்ச்சிகள் நடத்துவதற்குத் தேவையான பாத்திரங்களும் கூட்டங்கள் நடத்துவதற்கு Meeting Hall வசதியும் உள்ளன.